ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

...ங்கள்: பதினெட்டு

...1 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 18 சனிக்கிழமை (01.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## ...லகத் தொழிலாளர் தினம் இன்று

# ...ட்டங்களுக்கும் பேரணிகளுக்கும்

# ...டளாவிய ரீதியில் விரிவான ஏற்பாடு

(...ாழ்ப்பாணம்)

...லகத் தொழிலாளர் தினமான இன்று அரசியல் ...சிகள் பேரணிகளையும் பொதுக் கூட்டங்களை ...நடத்தத்திட்டமிட்டுள்ளன. தமிழ்த்தேசியக் கூட் ...மைப்பும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும், யாழ்ப் ...ணத்தில் தமது அலுவலகத்தில் மேதினத்தைக் ...ண்டாடவுள்ளன. (18ஆம் பக்கம் பார்க்க)



முகாம் மக்களுடன் கலந்துரையாடும் அமைச்சர் முரளிதரன்

## ...டக்கிலிருந்து கிரமமான முறையில் ...ராணுவத்தினர் அகற்றப்படுவர்?

### ...துகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

...கிலிருந்து கிரமமாக முறையில் இராணு ...ரை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் ...காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ ...தெரிவித்துள்ளார்.

...ழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டிருந்த ...தின் போது அவர் இதனைக் குறிப்பிட் ...

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள தனியார் காணிகள் மற்றும் கட்டடங்களில் நிலை கொண்டுள்ள படையினர் படிப்படியாக அகற்றிக் கொள்ளப்படுவர் என்றார்.

பாதுகாப்பு நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் துருப்பினரின் எண்ணிக்கை குறைக்கப்படும். அதன் பின்னர் மக்கள் குறித்த பிரதேசங்களில் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

பூட்டானின் திம்பு நகரில் நடைபெற்ற 16 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி நேற்று நண்பகல் 12.00 மணியளவில் நாடு திரும்பினார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பூட்டானில் ஜனாதிபதி சார்க் வலய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து முக்கியமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய ஆரம்ப உரை சார்க் நாடுகளின் தலைவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாகிஸ்தான், மற்றும் இந்தியப் பிரதமர்களைச் சந்தித்த ஜனாதிபதி மகிந்த முக்கிய கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டிருந்தார். (ச-3,9)

## ...பங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு ...ழைப்பாளிகளே சக்தியாக விளங்கினர்



### மேதினச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தியின் ஊடாக இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றியமைக்க இன்றைய தொழிலாளர் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத் துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளதாவது,

உலகத் தொழிலாளர்தினத்தை கொண்டாட உலகமக்களுடன் பெருமையுடன் இணைந்து கொள்ளும் இலங்கையின் உழைக்கும் மக்களுக்கு பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

எமது நாட்டின் உழைக்கும் மக்கள் மத்தியில் பயங்கரவாதமே பெரும் சவாலாக இருந்தது. மூன்று தசாப்தங்களின் பின்னர் அதனை (18ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

**மாத்தளன், வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களில் இருந்து மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் விபரங்கள்**

## ...டங்கு நோயினால் ...ன்குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

...ங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த ...டரை வயதான பெண்குழந்தை நேற்று ...ல் 1.30 மணியளவில் உயிரிழந்துள் ...

...ல்லாகத்தைச்சேர்ந்த சுஜிந்திரன் சரண்யா ...ழந்தையே உயிரிழந்தவர் ஆவார். ...ஒருவார காலமாக காய்ச்சல் காரண ...ரியார் மருத்துவமனையில் சிகிச்சை ...ந்த நிலையில் நேற்று முன்தினம் ... 8.00 மணியளவில் யாழ். போதனா ...த்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரி ...னுமதிக் (18ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தல் சம்பவங்களுக்கு எதிராக யாழில் நாளை கண்டனப் பேரணி

### 'மக்கள் சக்தி' அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறுவர்கள் கடத்தப்படல் மற்றும் பாலியல் வல்லுறவு, கப்பம் கோரிக் கடத்தல் போன்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை கோட்டை முனியப்பர் ஆலய முன்றலில் இருந்து கண்டனப் பேரணி மேற்கொள்ளப்படவுள்ளது.

மக்கள் சக்தி என்ற அமைப்பினால் இக் கண்டனப் பேரணி மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பாக மக்கள் சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

சிறுவர்கள் கடத்தப்படல், யுவதிகள் கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதல் மற்றும் கப்பம் கோரி கடத்தப்படல் போன்ற சம்பவங்கள் தமிழ் (18ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர் துமிந்த பிணையில் விடுதலை


(கொழும்பு)

பிரிகேடியர் துமிந்த கெப்பட்டிவலனவை கொழும்பு பிரதான மஜிஸ்ட்ரேட் பிணையில் நேற்று விடுதலை செய்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உதவியாளராக கடமையாற்றியமையே இவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பிற்பாடு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (18ஆம் பக்கம் பார்க்க)





வன்னிப் போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூரும் வகையில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருந்த தூபியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுத் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை முப்படைத்தளபதிகள் அழைத்துச் செல்வதையும், நினைவுக்கல்லை அவர் திறந்துவைப்பதையும், நினைவுத் தூபியையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் உள்விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தலையிடாது

## இலங்கைக்கான பிரதிநிதி உறுதி

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்குக் கட்டளைகளை பிறப்பிக்காது என ஒன்றியத்தின் இலங்கைகான பிரதிநிதி பேர்னாட் சவேஜ் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா கைது ஆகிய விவகாரங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இலங்கையின் உள்விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியம் எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதும் அதனை நிராகரிப்பதும் இலங்கையின் கைகளில் தங்கியுள்ளது.

மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்ற துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தொடர்பில் பாதகமான நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டிருப்பதாகவே அனேகமான இலங்கை மக்கள் கருதுகின்றனர்.

கடந்த பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பிவைத்திருந்த வாழ்த்துச் செய்தியின் மூலம் ஒன்றியத்தின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை புரிந்து கொள்ள முடியும்

மார்ச்மாதத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மிகவும் சாதகமான முறையில் அமையப்பெற்றது. அரசியல் சாசனத்தில் திருத்தங்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமை இலங்கை அரசாங்கத்திற்கு காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் காணப்பட்டால் அதன் ஊடாக அரசியல் சாசனத்திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் அடிப்படைச் சட்டங்களுக்கு மதிப்பளித்து பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் வலியுறுத்தினார். (சி)

# கட்சியின் மறுசீரமைப்புக் குறித்து அடுத்த வாரம் அறிவிக்கப்படும்

## ஐ.தே. கட்சி தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பாக அடுத்த சில வாரங்களில் கட்சித் தலைவர் அறிவிப்பாரென அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் றுவான் விஜயவர்த்தன தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

குறைநிரப்புப் பிரேரணையின் மூலம் ஒதுக்கப்பட்ட பணம் செலவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட றுவான் விஜயவர்த்தன இதன் காரணமாகவே வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிப்பதை அரசு தாமதப்படுத்தியுள்ளதெனக் குறிப்பிட்டார்.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. எச்.எஸ்.பி.சி வங்கி மற்றும் ஹெய்யின் ஆகியவற்றிற்குச் செலுத்தவேண்டிய கடன்களால் நாட்டில் பொருளாதாரத்திற்கு பாரிய அழுத்தம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் பொருட்களின் விலைகளை குறைத்த அரசாங்கத்திற்கு மீண்டும் பொருட்களின் விலைகளை அதிகரிக்க நேரிடும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மறுசீரமைப்புக் குறித்தும் இதன்போது கருத்து வெளியிட்ட றுவான் விஜயவர்த்தன தலைவர் உள்ளிட்ட கட்சியின் ஏனைய உறுப்பினர்களால் மறுசீரமைப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தலைவர் தனது தீர்மானத்தை அறிவிக்கவுள்ளதாகக் குறிப்பிட்ட றுவான் விஜயவர்த்தன கட்சியில் மாற்றம் ஒன்றினை ஏற்படுத்த எண்ணியுள்ளதாக தலைவர் தெளிவாகக் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். (ச-3)


## முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்பு

தென்மராட்சியில் ஆரம்பம்
ஆரம்பம்:ஞாயிறு (02-05)
மாலை 2.30 மணி
7ஆம் திகதிவரை தினமும்
2.30 -5.30 மணிவரை
வகுப்புகள் நடைபெறும்.

(சி-187)

உயர்கலைக் கல்லூரி,
மீசாலைச் சந்தி.


## நுவரெலியா செல்லும் யாழ்.வலய அதிபர்களுக்கு

நுவரெலியாவில் உள்ள பிள்ளைநேயப் பாடசாலைகளை அவதானிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட, யாழ்ப்பாணக் கல்வி வலய அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் இடம்பெறும்.

இதில்சம்பந்தப்பட்ட அதிபர்களைதவறாதுகலந்துகொள்ளுமாறுவலயக்கல்விப் பணிப்பாளர்திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ந)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



இளைய நிலா சனசமூக நிலையத்தின் கட்டட புனரமைப்புக்காக இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி எமது நிலையத்தை புனரமைப்பதற்கு உதவிய கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு இளைய நிலா சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தினர் சார்பிலும் பொது மக்கள் சார்பிலும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்
இளையநிலா சனசமூக நிலையம்
அராலி வீதி, புதிய குடியிருப்பு,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(1302)


## நாவலப்பிட்டிச் சம்பவம்

# எம்.பிக்கள் மூவரிடம் ஸ்ரீ.ல.சு.கட்சி விசாரணை

நாவலப்பிட்டிச் சம்பவம் தொடர்பாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஸ்ரீ.ல.சு.க.விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. ஜனாதிபதி பூட்டானில் இருந்து நாடு திரும்பியதும் இது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது நாவலப்பிட்டிய பகுதியில் குழப்பம் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவங்கள் பற்றியே விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி குழப்ப நிலை காரணமாக மீள் வாக்குப் பதிவு நடந்தது. எனினும் கண்டி மாவட்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. (6)

## சீரற்ற காலநிலையால் இன்று மழை பெய்யக்கூடும்

நாடளாவிய ரீதியில் அடுத்த சில தினங்களில் கடும் காற்றுடன் மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக குறுகிய காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை விசேட நிபுணர் தமயந்தி இதிஹெட்டி கேவகே குறிப்பிட்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று பிற்பகல் அல்லது மாலை வேளையில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென அவர் கூறினார்.

அத்துடன் இன்றைய தினம் காலை வேளையில் கிழக்குப் பிரதேசத்திலும் தென்கிழக்குப் பிரதேசத்திலும் மழை பெய்யக் கூடிய நிலை காணப்படுவதாக வானிலை விசேட நிபுணர் மேலும் தெரிவித்தார். (ச-3)


## விற்பனைக்கு

சோடனைப் பந்தல் மணவறையுடன் விற்பனைக்குண்டு. விலை நேரில்.
தொடர்புக்கு:
021 3737968
077 9789467
(1299)

## தவறிவிட்டது

27.04.2010 அன்று மனோகரா சந்திக்கும் நாச்சிமார் கோவிலுக்குமிடையில் சந்திரசேகரம் குருசாந்த் ஆகிய எனது கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:077 3926471
(1298)

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள பற்றறியில் இயங்குகின்ற மிதிவண்டி (Cycle),14" T.V விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:
071 8798026
(1295)

## காணி விற்பனைக்கு

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.
Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770
(1212)

## ஸ்ரீராம ஜெயம்

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப்பார்க்கப் படும். T.P:0778752163
414, சன்ஜெயா உணவகம்,
மேல்மாடி அறை இல.02
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(1249)

# இன்று ஒரு தகவல்

## வரம்

வரம் கொடுத்து விட்டு மாட்டிக்கொண்டு முழிப்பது எல்லா இடத்திலும் இருக்கும் போலிருக்கு.

பத்மாசுரன் என்ற அரக்கன் மிகவும் வலிமையுடையவன். முனிவர்களுக்கெல்லாம் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். நாரதருக்கு இந்த விடயம் தெரிந்து விட்டது. உடனே புறப்பட்டு பத்மாசுரனிடம் சென்றார். அவனைப் பார்த்து,

"என்னப்பா? இப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தார்.

"உம்மைப் போன்று சாதுவாக இருந்துவிட்டால் துன்பமில்லை. எங்களைப் போன்றவர்களுக்கு பல பிரச்சினை. எங்களுக்கு யாரும் மரியாதையே கொடுப்பதில்லை. அழித்து விடவேண்டுமென்றே எல்லோரும் நினைக்கிறார்கள்" என்று குறைபட்டுக் கொண்டான். உடனே நாரதர் அதற்கு ஒரு வழி சொன்னார்.

"இதோ பாரப்பா! இதற்கேன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்?" சிவனை நினைத்து தவம் செய். அவர் தோன்றி என்னவரம் வேண்டும்? என்று கேட்பார். ஏதாவதுவரம் கேள். அதன்பின் உனக்கு மரியாதை அதிகமாகி விடும்" என்றார்.

"என்ன வரம் கேட்பது?" என்றான் அவன்.

"எதிரிகளெல்லாம் உன்னைக் கண்டுபயப்பட வேண்டும். அவ்வளவு ஏன்? உனக்கு வரம் கொடுத்த சிவனே உன்னைக் கண்டு பயப்படவேண்டும். அப்படியான ஒரு வரம் கேட்டு வாங்கிக் கொள்" என்றார்.

"எப்படியான வரம் பெற்றால் எல்லோரும் பயப்படுவார்கள்?" என்று கேட்டான்.

"அதாவது உன் கையை யார் தலையில் வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பலாக வேண்டும். அப்படி ஏதாவது வரத்தை வாங்கிவிடு" என்றார்.

"சரி" என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுச் சென்றான். கடும் தவம் புரிந்தான். சிவபெருமான் அவன் முன் தோன்றினார்.

"பத்மாசுரா உன் தவத்தை மெச்சினேன். என்னவரம் வேண்டும் கேள்" என்றார்.

"நான் யார் தலையில் கையை வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பலாகி விடவேண்டும்." என்றான்.

"சரி! அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி வரம் கொடுத்து விட்டு அவர் போய்விட்டார்.

பத்மாசுரன் நடந்து வந்து கொண்டிருந்தான். எதிரில் நாரதர் வந்து கொண்டிருந்தார். விடயத்தை சொன்னான்.

"அதுசரி! அவர் நிஜமாகவே வரம் கொடுத்தாரா? அதை நீ சோதித்துப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"எப்படி சோதிப்பது?" என்று கேட்டான்.

"இது என்ன பெரிய விடயம்? யாருடைய தலையிலாவது கையை வைத்துப் பார்க்க வேண்டியது தானே!" என்றார்.

"அப்படியானால் நீங்கள் தான் கொஞ்சம் உதவி பண்ண வேண்டும். உங்கள் தலையைக் கொஞ்சம் காட்டுங்களேன்" என்றான்.

"இது என்னடா வம்பாய் போச்சு" என்று எடுத்தார் ஓட்டம் நாரதர்.

இருந்தாலும் போகும் போது ஒரு யோசனையை சொல்லிவிட்டு ஓடினார்.

"என்னை சாம்பலாக்கி விட்டாய் என்றால் அதன் பின் உனக்கு யோசனை சொல்வதற்கு ஆள் இருக்காது. அதனால் உனக்கு வரம் கொடுத்தவரின் தலையிலேயே கையை வைத்துப்பார். பலிக்கவில்லை என்றால் அவரையே பிடித்துக் கொள்ளலாம்" என்றார்.

'அதுவும் சரிதான்' என்று அவன் சிவனைத்தேடிக் கொண்டு புறப்பட்டான்.

நார்தர் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடிவந்து திருமாலிடம் விடயத்தைக் கூறினார். உடனே திருமால் புறப்பட்டு சிவனிடம் ஓடினார். அங்கே போனால் அவரை பத்மாசுரன் துரத்திக் கொண்டிருந்தான்.

திருமால் ஒரு யோசனை பண்ணினார். அழகான மோகினி வடிவம் கொண்டார். பத்மாசுரன் பார்த்தான். கிட்டே ஓடிவந்து "என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?" என்று கேட்டான்.

"சரி பண்ணிக் கொள்கிறேன். அதற்கு முன் நீபோய் நன்றாக குளித்துவிட்டு எண்ணெய் தடவி சீவிக் கொண்டு வா" என்றது அந்த மோகினி.

பத்மாசுரன் குளிப்பதற்கு ஓடினான். ஆற்றில் இறங்கினான். தலையை தேய்ப்பதற்காக கையைத் தன் தலையில் வைத்தான். அவ்வளவு தான் ஆள் குளோஸ்.

வரம் பலித்துவிட்டது. அவனே எரிந்து சாம்பலாகிவிட்டான். எல்லோரும் நிம்மதியாக மூச்சுவிட ஆரம்பித்தார்கள்.

வரம் கொடுத்து விட்டு மாட்டிக் கொண்டால் இப்படியெல்லாம் பண்ணித்தான் தப்பிக்க வேண்டியிருக்கிறது.

இதற்காகத்தான் சொல்கிறது. அவசரப்பட்டு வரம் கொடுப்பதும் தப்பு! வாக்குக் கொடுப்பதும் தப்பு! எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அன்றைக்கு அப்படித்தான் ஒருத்தர் என்னிடம் வந்தார்.

"மனித நேயம் என்றால் என்ன?" என்று கேட்டார்.

"ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கிறது" என்றேன்.

"அது ரொம்ப அவசியமா?" என்றார்.

"ஆமாம்" என்றேன்.

"அப்படியானால் ஒரு 50 ரூபா கைமாத்து கொடுங்க!" என்று வாங்கிக் கொண்டுபோய் விட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாட்டிற்கு பொருத்தமான தேசிய போஷாக்கு கொள்கை அறிமுகம்

(கொழும்பு)

நாட்டிற்கு பொருத்தமான தேசிய போஷாக்கு கொள்கை அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது என்ற சுகாதார அமைச்சின் போஷாக்குப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சாந்தி குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல தரப்பட்ட பராயத்தை கொண்டவர்களுக்கு பொருத்தமான உணவு விபரங்களும் அதில் இடம்பெற்றிருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய போஷாக்கு மாதம் நாடாளவிய ரீதியில் யூன் மாதம் அனுஷ்டிக்கப்படும். இளைஞர்களுக்கான போஷாக்கே எதிர்கால அபிவிருத்திக்கு தேவையானது என்பது இதன் தொனிப் பொருளாகும். குழந்தை பிறக்கும் சமயத்தில் அதன் தாயார் போஷாக்கின்மை மற்றும் குறைந்த இரத்தமுத்தம் என்பனவற்றினால் பாதிக்கப்பட்டிருந்தால் எடைகுறைந்த பிள்ளைகளை பிரசவிக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிறந்த ஒரு குழந்தையின் சாதாரண நிறை இரண்டரைக் கிலோவாகும். பிறந்த தினத்திலிருந்து குறைந்தது 6 மாத காலத்திற்கு தாய்ப்பால் கொடுக்கப்படவேண்டும் என்றும் டாக்டர் குணவர்தன தெரிவித்தனர். (2-4)

## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சைகள்

(அல்வாய்)

தரம் 5 மாணவர்களை ஊக்குவிப்பதற்கான மாதிரிப்பரீட்சைகளை மே மாதம் தொடக்கம் யூலை மாதம் வரையிலான காலப்பகுதியில் நடத்துவதற்கு மாகாண கல்வி திணைக்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய 6பரீட்சைகள் இக்காலப் பகுதியில் நடைபெறவுள்ளதுடன் முதலாவது பரீட்சை எதிர்வரும் 8ஆம்திகதி சனிக்கிழமை நடைபெறும். ஏனைய பரீட்சை கள் எதிர்வரும் 22ஆம் திகதி யூன் மாதம் 5, 19 ஆம் திகதி, யூலை மாதம் 3 ,17 ஆகிய திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளை நடத்தி உடனுக்குடன் பகுப்பாய்வுகளை செய்து புள்ளிகளை அவ்வப் வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளரிடம் கையளிக்க வேண்டும் எனவும் இவை தொகுக்கப்பட்டு மாகாண கல்வி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இப்பரீட்சைக்கான வினாத்தாள்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் பரீட்சைக்கு முதல்நாள் பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார். (4-19)

## இராசி பலன்

*01-05-2010*
*(சித்திரை 18, சனிக்கிழமை)*
*திருதியை பிற்பகல் 5.02 மணிவரை*
*கேட்டை முழுவதும்*
*இராகுகாலம் 8.57-10.27 மணிவரை*
*சுபநேரம் 2.57-4.27 மணிவரை*
*சுன்னாகம் கதிரமலைச்சிவன் கொடி.*

| | |
|---|---|
| மேடம் | வாகன பயம், காரிய இடையூறு, ஆரோக்கியக் குறைவு, போசன சுகம். |
| இடபம் | அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம், வாகன சுகம், எடுத்த காரியம் கைகூடும். |
| மிதுனம் | உற்சாகம், தொழிலில் ஆர்வம், நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும். |
| கடகம் | கௌரவக் குறைவு, வேலைச் சுமை, அதிகசெலவு, புத்திரரால் கவலை. |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், தேவையற்ற பயம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | புதிய பொருள் சேர்க்கை, நல்ல முயற்சி, போசன சுகம், கலந்துரையாடல். |
| துலாம் | கோபப்படுதல், தேவையற்ற செலவு, முயற்சி தாமதம், போசன சுகக் குறைவு. |
| விருச்சிகம் | பெரியோர் சந்திப்பு, தேகநலன், சயன சுகம், கற்பனை மிகுதி. |
| தனுசு | சத்துரு ஜெயம், சுபகாரியச் செலவு, அமைதிக்குறைவு, ரோக நிலை. |
| மகரம் | கலந்துரையாடல், தொழில் நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம். |
| கும்பம் | அதிக பிரயாசை, பெரியோர் உதவி, மேன்மை, நல்லசெய்தி. |
| மீனம் | பிரயாணம், முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு, அதிகசெலவு. |

வளவன்

# இலங்கையில் 200 இந்தியன் வங்கி கிளைகள் நடப்பாண்டில் திறக்கப்படும்

## இந்தியன் வங்கித் தலைவர் தெரிவிப்பு

இலங்கையில் யாழ்ப்பாணம் உட்பட 200 இந்தியன் வங்கிக் கிளைகள் நடப்பு ஆண்டில் திறக்கப்படும் என்று இந் தியன் வங்கி தலைவர் டி.எம்.பாசின் கூறினார்.

தமிழகத்தை தலைமை இடமாக கொண்டு செயல்பட்டு வரும் இந்தியன் வங்கியின் புதிய தலைவராக டி.எம்.பாசின் சில நாட்களுக்கு முன் பதவி ஏற்றார். நேற்று முன்தினம் அவர் டெல்லியில் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்தியன் வங்கி தென் இந்தியாவில் மிக சிறந்த வங்கியாக செயல்பட்டு வருகிறது. இந்த வங்கியை வட இந்தியாவிலும் மேற்கு இந்தியாவிலும் சிறந்த வங்கியாக கொண்டு வர திட்டமிட்டு இருக்கிறோம்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் விரைவில் இந்தியன் வங்கி கிளை தொடங்கப்படும். நடப்பு ஆண்டில் மட்டும் ஏறத்தாழ இருநூறு கிளைகளை திறக்க இருக்கிறோம். இன்னும் 2 ஆண்டுகளில் வட இந்தியா மற்றும் மேற்கு இந்தியாவில் 400 கிளைகளை தொடங்க திட்டமிட்டு இருக்கிறோம் என்றார். (2-6)

## அரச வைத்தியசாலைகளில்

# மருந்துத் தட்டுப்பாட்டை ஆராய்வதற்கான நடவடிக்கை

அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடுகள் நிலவுகின்றதா என்பதை ஆராய்வதற்கு நடவடிக்கைஎடுப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தகவல்கள் வெளியானதை அடுத்தே அமைச்சு இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை தொடர்பாக உறுதி செய்யப்பட்ட தகவல்கள் எதுவும் இது வரை கிடைக்கவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் கூறினார். தொழில் சங்கங்களும் இது குறித்து அறிவிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை தெரியவந்தால் அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக டாக்டர் மேலும் தெரிவித்தார். (2-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 70 |
| தக்காளி | 80 | 100 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 90 | 90 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | -- |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 250 |
| போஞ்சி | 150 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 35 | 40 | 25 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |




பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கராத்தே போட்டியில் பதக்கங்களைப் பெற்ற வடமராட்சிக் கராத்தே வீரர்களுக்கான பாராட்டு விழா அண்மையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கழகத்தலைவர் பொ.மகாதேவா மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப் பீட பேராசிரியர் நடராஜசுந்தரம் நிற்பதையும், வர்த்தகர் எஸ்.செல்வநாயகம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பீ.இரகுவரன் ஆகியோர் வெற்றிபெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும், வர்த்தகர் பொ.இராசதுரை, கராத்தே ஆசான் மா. இரத்தினசோதிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

## வீதிகள் சீராக செப்பனிடப்படாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

(வட்டுக்கோட்டை)

நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட பல்வேறு வீதிகள் தற்பொழுது செப்பனிடப்பட்டு வருகின்றது. அவ்வாறு செப்பனிடப்படுகின்ற வீதிகள் சீராக செப்பனிடப்படாமையால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதை காணக்கூடியதாகவுள்ளது.

வீதிகளில் காணப்படுகின்ற குன்று குழிகளை நிரப்பும் நோக்கோடு தாரோடு கல்லும் சேர்த்து செப்பனிடப்படுகின்றது. அவ்வாறு செப்பனிடப்படுகின்ற வீதிகளில் தாரோடு சேர்த்து இடப்படுகின்ற பெருமளவான கற்கள் வீதிகள் எங்கும் சிந்திக் காணப்படுவதால் பாதசாரிகளும் மற்றும் மக்களும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே இவ்வாறான வீதிகள் செப்பனிடப்படுகின்றபோது பொதுமக்களுக்கு இடையூறு இன்றி நீண்டகாலத்திற்கு மக்கள் பாவனைக்கு ஏற்றவகையில் இருப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றார்கள். (4-27)

## க.பொ.த(உ/த) சித்திரப்பாட மாணவர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் க.பொ.த. (உ/த) இல் சித்திர பாடத்தை கற்கும் மாணவர்களுக்கான சித்திர பாட செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ். பல்கலைக்கழக புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

க.பொ.த (உ/த) சித்திரப்பாடத் திட்டத்திலுள்ள நவீன ஓவிய இயக்கப் போக்குத் தொடர்பான பகுதி, ஐரோப்பிய ஓவியக்கலைஞர்கள் கலைப்படைப்புக்கள் முன்னிறுத்தும் காட்சி மூலம் விளக்கப்படவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த. (உ/த) இல் சித்திரம் பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு யாழ் .பல்கலைக்கழக நுண்கலை துறை தலைவர் ஏ.என். கிருஷ்ணவேணி கேட்டுக்கொள்கின்றார். (6)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அபாக்கஸ் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம் யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளாண் மகளிர் ஒன்றியத்துடன் இணைந்து GAMA அபாக்காஸ் நிறுவனத்தின் ஊடாக யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் விசேட பயிற்சி உடுவில் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள ஒன்றியக் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 12.30 மணிவைர தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் 1.30 மணிமுதல் 5.30 மணிவரை வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் நாளை மறுதினம் திங்கட்கிழமை 1.30 மணிமுதல் 5.30 மணிவரை வலி.வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இப் பயிற்சி நடைபெறவுள்ளது. (6-4)

## மெல்லக் கற்போருக்கான பின்னூட்டல் வகுப்புக்கள்

(குருநகர்)

மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின்(பிரான்ஸ்) ஆதரவில் இயங்கும் கல்வி முன்னேற்றக் கழகத்தினர் வித்தியாலய அதிபர் ஞானப்பிரகாசத்தின் ஒத்துழைப்புடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தினமும் மாலை 4.30 மணிமுதல் 6மேணிவரை மெல்லக் கற்போருக்கான பின்னூட்டல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் கல்வி சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றி கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் வருகை தந்து இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கழகச் செயலர் சி.எம்.நெல்சன் தெரிவித்துள்ளார். (4-39)

## தேசிய டெங்குக்கட்டுப்பாட்டு வாரம்

நாடு முழுவதிலும் தற்போது பருவகால மழை பெய்து வருவதனால் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு மத்திய சுகாதார அமைச்சினால் மே மாதம் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரையான வாரத்தினை தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலும் பல பகுதிகளிலும் மழைபெய்து வருவதனால் இங்கும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கலாம். மேலும் யாழ்.குடாநாட்டிற்கு தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

அதேபோன்று குடாநாட்டில் இருந்தும் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தென் பகுதிக்கு சென்று வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் டெங்கு நோயின் பரம்பல் யாழ். மாவட்டத்தில் மிக மோசமாக அதிகரிக்கலாம்.

எனவே யாழ். மாவட்டத்திலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அடுத்த வாரத்தில் தீவிரப்படுத்த வேண்டும். இவ் வாரத்தில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

1. ஒவ்வொரு பாடசாலையிலும் சிரமதான பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்படவேண்டும்.
2. ஒவ்வொரு நிறுவனத்திலும் திணைக்களத்திலும் ஊழியர்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணி இடம்பெறவேண்டும்.
3. ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்படவேண்டும்
4. பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாக கிரமமாக துப்புரவு செய்யப்படவேண்டும்.
5. மத வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
6. கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப் பணி மூலம் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.
7. உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவுகளை கிரமமாக அகற்றி சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
8. கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
9. வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும்.
10. ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்பு பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் வேண்டும்.

இச் செயற்பாடுகளை அடுத்த ஒரு வார காலத்திற்குள் முன்னெடுத்துடெங்கு நோயை கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிராந்தியப் பணிப்பாளர் ,சுகாதார சேவைகள் ,யாழ்ப்பாணம்.**

## காலம் முந்திப் பிறக்கும் பிள்ளைகளின் இறப்பு வீதத்தினை குறைத்துக்கொள்ளமுடியும்

### யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை பராமரிப்புப் பிரிவிற்கு லண்டனிலிருந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட உபகரணங்கள் மூலம் வைத்தியசாலையில் காலம் முந்திப் பிறக்கும் குழந்தைகளின் இறப்பு வீதத்தினைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாகவிருக்கும் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

குழந்தைகளைப் பராமரிக்கும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது, கொழும்பு லயன்ஸ் கழகத்தின் முயற்சியினால் லண்டன் தமிழ் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூன்று உபகரணங்களை எமது வைத்தியசாலைக்கு தந்துதவியமை மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

வைத்தியசாலையில் கட்டடங்கள், உபகரணங்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றது. இவ்வாறான சேவைகளை சர்வதேச மட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தொடர்ந்து செய்ய வேண்டும்.

வைத்தியசாலையில் பிறக்கின்ற குழந்தையின் எண்ணிக்கையில் ஐம்பது வீத இறப்பைக் குறைக்கக்கூடிய விதத்தில் காலத்திற்கு முந்திப் பிறக்கும் குழந்தைகளை தனியாகப் பராமரிக்கும் முகமாக இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை பற்றாக்குறையில்லாது தொடர்ந்து வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். (2-30)




## மகாபாரதம் அகலத் திரையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் திரைப்படப் பிரிவின் ஏற்பாட்டில் 'மகாபாரதம்' வரலாற்றுக் காவியம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் அகலத் திரையில் திரையிடப்படவுள்ளது.

இச் செயற்பாட்டிற்கமைவாக முதலாவது காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளது. இதன் போது மகாபாரதம் முதலாம், இரண்டாம் பாகங்கள் திரையிடப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் அனுமதியைப் பெற்று இக் கண்காட்சியைப் பார்வையிடலாம் என்று திருமறைக் கலாமன்ற திரைப்படப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (6)

# இலங்கை உள்ளிட்ட நாடுகள் பணிப்பெண்களை பாதுகாப்பதற்கு கூடிய கவனமெடுக்கவில்லை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகள் தமது நாட்டின் வீட்டுப் பணிப்பெண்களை பாதுகாப்பதற்காக போதிய அளவில் செயற்படவில் லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மே தினத்தை முன்னிட்டு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கை ஒன்றில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கை, பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற ஆசிய நாடுகள் வெளிநாடுகளுக்கு இலட்சக் கணக்கான தமது பெண்களை வீட்டுப்பணிகளுக்காக அனுப்புகின்றன. எனினும் அவர்கள் பணியாற்றுகின்ற வீடுகளிலும் அவர்களின் முகவர்களினாலும் வீட்டுப் பணிப்பெண்கள் அனுபவிக்கின்ற துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாக்க இந்த அரசாங்கங்கள் போதிய அளவில் செயல்படவில்லை.

தற்காலத்தில் வீட்டுப்பணிப் பெண்களாக செல்பவர்கள் வன்முறை மற்றும் தவறான பயன்பாடுகளினால் மிக அதிக அளவான ஆபத்து நிலையை எதிர் நோக்கி இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் தற்போது வெளிநாட்டுப் பணிப் பெண்களை ஏற்கின்ற பஹ்ரெயின், ஜோர்தான் குவைத் லெபனான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு ராச்சியம் ,மலேசியா மற்றும் சிங்கப்பூர் என்பன வளர்ச்சி அடைந்து காணப்படுகின்ற போதும் அவர்களை பாதுகாப்பதற்கான அடித்தளத்தை கொண்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## குருபூசைத் தினம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோவிலில் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை திருநாவுக்கரச நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது.

அன்று காலை தீர்த்தோற்சவம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பர்வதவர்த்தனி உடனுறை இராமலிங்கேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளது. (4)

# வெள்ளநீரில் அடித்து செல்லப்பட்ட இருவர் உயிரிழந்துள்ளனர்

## மொனராகலயில் சம்பவம்

(கொழும்பு)

மொனராகலை பிரதேசத்தில் பெய்து வரும் மழை காரணமாக இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மொனராகலை மாவட்ட இணைப்பாளர் ரவீந்திரகுமார தெரிவித்துள்ளார்.

மெதகம, ரத்னதெனியவில் வசிக்கும் 22 வயதுடைய யுவதியும் பசறையைச் சேர்ந்த ஏழு வயது மதிக்கத்தக்க சிறுமியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

ரத்னதெனியவில் வசிக்கும் கும்புக்கன் ஓயாவுக்குக் குறுக்காகப் .போடப்பட்டுள்ள பாலத்தில் செல்லுகையில் தவறி வெள்ள நீரில் விழுந்து அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். (2-6)

# கிளி.முல்லைத்தீவு மாவட்டங்களில் வைத்தியர்களை நியமிக்க ஏற்பாடு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு ஓய்வு பெற்ற வைத்தியர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட வைத்தி யர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெறும் வைத்தியர்களுக்கு ஓய்வூதியத்தின் போது அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளம் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை மே மாதம் 5ஆம் திகதிக்கு முதல் அனுப்புமாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார். (2-6)

# பிரபாகரன் வீடு இடிந்து போனதற்கும் இராணுவத்திற்கும் சம்பந்தம் இல்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பூர்வீக வீட்டை இலங்கை இராணுவத்தினர் இடித்து தள்ளிவிட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டுகிறார் .எனினும் இக்குற்றச்சாட்டை இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க மறுத்துள்ளார்.

இது பற்றி தெரியவருவதாது,

யாழ். குடாநாட்டின் வல்வெட்டித்துறையில் உள்ள பிரபாகரன் குடும்பத்தினரின் பூர்வீக வீட்டை பார்க்க தெற்கில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் இதை பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் வீட்டை இடித்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வீட்டிற்கு இராணுவ பாதுகாப்பு போடப்பட்டிருந்தாகவும் வீட்டை சிறிது சிறிதாக உடைக்கும் பணி கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்ததாகவும் இது பற்றி தான் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.


ஆனால் வீடு இடிந்து போனதற்கும் இராணுவத்திற்கும் எவ்விதம் சம்பந்தமும் இல்லை என்றும் வீட்டை இடிக்க வேண்டிய தேவையேதும் இராணுவத்துக்கு இல்லை என்றும் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறியுள்ளார்.

1978 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இராணுவ நடவடிக்கையின் போது இந்த வீடு பலமாக சேதமடைந்தது. பிரபாகரனின் வீட்டார் இந்த வீட்டை விட்டு 1983 இல் வெளியேறிவிட்டதாக கூறப்படுகிறது.

இலங்கையின் வன்னிப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களின் கல்லறைகள், அலுவலகங்கள் போன்றவைகளும் கடந்த சில மாதங்களில் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுவருவது இங்கே குறிப்பிடத்தக்கது. (2-6)

# நெஞ்சை விட்டகலா இரண்டாமாண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27.04.1947 மறைவு 30.04.2008



## அமரர் தேவகி துரைராஜா

(ஓய்வு பெற்ற தொலைக்கல்வி போதனாசிரியையும்
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபரும்)

காலத்தால் மறக்க முடியாத தாயே
பாசத்தால் எம்மை கட்டுண்டறுத்த தாயே
வந்தாரை வாழ்விக்கும் பெருமனம் படைத்த தாயே
பிள்ளைகளையெல்லாம் உன் பிள்ளை போல் காத்த தாயே
காலமெல்லாம் கல்விக்கே சேவை செய்த தாயே
நாம் இனி உம் திருமுகத்தை எப்போ காண்போம் தாயே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

புறாடிலேன் (முன்ஒழுங்கை)
அரியாலை,
யாழ்ப்பாணம்.

கணவர்,
உற்றார், உறவினர்.

(1195)




நெடுந்தீவு வங்கிச் சங்கத்தின் சித்திரைப் புத்தாண்டு விழா நிகழ்வில் வங்கி முகாமையாளர் க.சதீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந.திருலோகலிங்கநாதன், கிராமசேவையாளர் நடராசா ஆகியோர் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்குவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# நாடளாவிய ரீதியில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சபை செயலகங்கள் அமைக்கப்படவுள்ளது

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் விரைவில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சபை செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும் மக்கள் சபை செயலாளர் பதவிக்கு 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளபடவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன என்று பிந்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு உலக வர்த்தக நிலையத்தில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே பிரதியமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டும் ஒவ்வொரு கிராமங்களினதும் அபிவிருத்தி வேலைத்திடங்களை அக்கிராம முக்கியஸ்தர்களே தீர்மானிக்கும் பொருட்டும் மக்கள் சபை செயலகங்களை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதாவது ஒவ்வொரு கிராம சேவை பிரிவுக்கும் ஒவ்வொரு மக்கள் சபை செயலகம் அமைக்கப்படும். இந்த மக்கள் சபை செயலகங்களின் செயலாளர்களாக பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளன்ர்.

மேலும் இவர்களுடன் குறித்த பிரதேசத்தின் சுகாதார' அதிகாரி சமுர்த்தி அதிகாரி மற்றும் விவசாய அதிகாரி ஆகியோர் அங்கத்தவர்களாக இடம்பெறவுள்ளனர்.

தற்போதைய நிலைமையில் மக்கள் சபை செயலக செயலாளர்களை தெரிவு செய்யும் பணிகள் இடம்பெற்றுவருகின் றன. இன்னும் சில வாரங்களில் இந்தப் பணிகள் நிறைவு பெற்றுவிடும்.

அந்த வகையில் இந்த மக்கள் சபை செயலக உறுப்பினர்களே குறித்த கிராமத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தீர்மானிப்பவர்களாகவும் ஒருங்கிணைப்பவர்களாகவும் செயற்படுவார்கள். இதன் மூலம் கீழ்மாவட்டத் திலிருந்து இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளை தவிர்க்க முடியும்.

இந்த வேலைத் திட்டத்தை அரசியலமைப்பில் உள்ளடக்கும் பொருட்டு அரசியலமைப்பு மாற்றமும் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார். (6)

# கடுமையான வெப்பநிலை காரணமாக அம்பாறை மாவட்ட மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவி வரும், கடும் வெப்பநிலை காரணமாக அப் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காலையிலிருந்தே கடும் வெயிலுடன் கூடிய உஷ்ணம் இரவுவேளைகளிலும் நீடிப்பதால் பாடசாலை செல்லும் மாணவர்களும் குழந்தைகளும் பல்வேறு உபாதைகளுக்கு ஆளாகி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சூழலில் வெப்பம் அதிகரித்துள்ளதன் காரணமாக பலவிஷ ஜந்துக்கள் மக்களின் குடியிருப்புக்களை நாடி வருகின்றன எனவும் வீடுகளுக்குள் பாம்பு, தேள், பூரான் போன்றவற்றின் பிரவேசம் அதிகளவில் காணப்படுகின்றன எனவும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இங்கு சுனாமி அனர்த்தம் காரணமாக வீடுகளை முற்றாக இழந்து இதுவரையும் வீடு வசதியில்லாமல் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வரும் குடியிருப்பாளர்கள் இம் மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். (6)

# திணைக்களங்கள், அதிகாரசபைகளின் உயர் பதவிகளிலும் மாற்றம்

(கொழும்பு)

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும்அதிகாரசபைகளின் உயர்பதவிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் தலைமை பதவி வகிப்பவர்களுக்கு கட்டாயம் இடமாற்றம் வழங்கப்படுவதுடன் புதியவர்கள் நியமிக்கப்பட்டவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுக்களின்விபரங்கள் அடங்கிய அமைச்சுக்களின் கீழ் வருகின்ற நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகள் தொடர்பில் தெளிவற்ற நிலைமை காணப்படுகின்றது. ஜனாதிபதி வர்த்தமானியில் கையொப்பம் இடாமையினாலேயே அமைச்சுக்களின் விபரங்கள் அடங்கிய வர்த்தமானியை வெளியிடமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சுக்களின் விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகாத நிலையில் ,பிரதமர் தி.மு.ஜயரத்ன உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் பலர் தங்களுடைய கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட துடன் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் சிலர் பொறுப்பேற்கவுள்ளனர். (6)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டமக்கள் சகல விதமான உரிமைகளும் பெற்று தலைநிமிர்ந்து வாழவேண்டும்

## மேதினச் செய்தியில் சுரேஷ் பிரேமச்சந்திரன் M.P



ஆயிரக்கணக்கான மக்கள் அகதிமுகாம்களிலும் இன்னும் பல ஆயிரக்கணக்கான மக்கள் மீள் குடியேற்றம் என்ற பெயரில் எந்தவித உதவியும் இல்லாமல் நடுத்தெருவில் நிற்கும் போது உழைப்பாளர் தமது உரிமைகளை வென்றெடுத்த தினமான மே தினம் வந்துள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"உலகத் தொழிலாளரே ஒன்று சேருங்கள்" என்ற சோசலிச சித்தாந்தக் கருத்துக்கள் யாவும் கம்யூனிஸ்ட் அரசுகளான ரஷ்யாவாலும் சீனாவாலுமே மூட்டை கட்டி வைக்கப் பட்டு பல காலமாயிற்று. இன்று ஒடுக்கு முறை அரசுகளின் பாதுகாவலர்களாக இவர்கள் மாறிவிட்டார்கள். இலங்கையில் பல்லாயிரம் விவசாயிகளையும் பல ஆயிரம் கூலித் தொழிலாளரைக் கொன்று குவிக்கவும் இவர்கள் தான் பல கோடி பெறுமதியான ஆயுதங்களை வழங்கினார்கள்.

சிங்கள விவசாயிகளும் தொழிலாளர்களும் கூட சிங்கள - பௌத்த இனவாதத்துள்ளும் சிங்கள- பௌத்த மேலாண்மை வாதத்துள்ளும் மூழ்கிப்போய் உள்ளார்களே தவிர ஆயிரக்கணக்கான தொழிலாளர் விவசாயிகளின் கொலைகளுக்கு ஒரு சிங்கள தொழிலாளர் அமைப்புக் கூட கண்டனங்களை வெளியிட்டதாக இல்லை. இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சிகளில் மிகப் பெரும்பாலானவை ஆளும் கட்சியின் இனவாதக் கருத்துக்களுக்கு முண்டு கொடுப்பவர்களாகவே உள்ளார்கள்.

இலங்கையின் தொழிலாளி வர்க்கங்களும் இனத்தாலும் மதத்தாலும் பிரிந்து இரு துருவங்களாக மாறிவிட்டன. வடக்கு- கிழக்கு தமிழர் மீது அரசு புரியும் இராணுவ ஆட்சிக்கு முண்டு கொடுப்பவர்களாகவே சிங்களத் தொழிலாளி வர்க்கமும் உள்ளது. உழைக்கும் மக்களின் காணிகளில் மிகப் பெருமளவு அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் இன்னும் இராணுவ கட்டுப்பாட்டிற்குள்ளேயே உள்ளது.

வன்னியில் விவசாயிகள் தமது சொந்தக் காணிகளுக்கு போக முடியவில்லை. திரும்பும் இடமெல்லாம் இராணுவ மயம், தற்காலிக முகாம்கள்,நிரந்தர முகாம்கள் என்ற நிலை இந் நிலையில் தான் தமிழ் மக்களாகிய நாமும் மே தினத்தை வரவேற்கவேண்டியுள்ளது.

வடமாகாணத்தில் கடத்தல், கொலை, பாலியல் வல்லுறவு என்பன அதிகரித்துச் செல்கின்றன.

குறுக்கு வழியில் சென்று உல்லாசத்தை அனுபவிக்க விளையும் தறிகெட்ட தமிழ் இளைஞர் சமூகத்தின் ஒரு சிலரும் இதில் ஈடுபட்டிருப்பது வேதனைக்குரியது.

மிக மோசமான யுத்தத்தால் நொந்து போய் இருக்கக்கூடிய ஓர் சமூகத்தை தோள் கொடுத்து உயர்த்திவிட வேண்டிய இளைஞர் சமூகம் பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல் நடந்து கொள்வது வருந்தத் தக்கது. வன்னியில் இருந்து வந்த யுவதி சுன்னாகத்தில் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளானது இதைத்தான் காட்டுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாய் வீதியெங்கும் காவலரண்களை அதிகரிக்க இராணுவம் விரும்புகின்றது.

இந்த நிலைகள் தகர்த்தெறியப்பட்டு , தமிழ் மக்கள் தமது கருமங்களைத் தாமே ஆற்றும் சூழல் உருவாக்கப்பட்டாலேயே தமிழ் தொழிலாளர்கள், விவசாயிகள் தலைநிமிர்ந்து வாழமுடியும். எமது நிலங்களுக்கு எமது மக்கள் போகவேண்டும். எமது வீடுகளுக்கு எமது மக்கள் போகவேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சகல உரிமைகளும், சகல உதவிகளும் பெற்று தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அங்குதான் தொழிலாளி, விவசாயி உயர்ந்துநிற்பான். அப்பொழுது தான் மேதினமும் உயர்ந்து நிற்கும் என்றார். (2-6)

# விமான,துறைமுக சேவைகளை அபிவிருத்தி செய்ய இந்தியா இணக்கம்

(கொழும்பு)

வடக்கு விமான மற்றும் துறைமுக சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா ஆர்வம் காட்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமான தளங்களைப் புனரமைத்தல் மற்றும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்னவிற்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தாவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றினை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது. (2-6)

# பிரபாகரன், பொட்டம்மான் இருவருக்கும் நடந்தது என்ன?

மேஜர் ஜெனரல் ஜகத்டயஸ் அதிரடி இணையத்தளத்திற்கு அளித்த செவ்வி இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)

வன்னிப்போரின் போது 57ஆவது படைப்பிரிவுக்கு தலைமைதாங்கிச் சென்றவரும் தற்போது ஜேர்மன் மற்றும் சுவிற்ஸர்லாந்துக்கான பதில் தூதுவராக பணி யாற்றி வருபவருமான மேஜர்ஜெனரல் ஜகத் டயஸ் சுவிற்ஸர்லாந்தின் சூரிச் மாநிலத்தில் தமிழ், சிங்கள பிரமுகர்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு பங்கேற்க வந்திருந்த போது அதிரடி இணையம் சார்பாக தாஸ் என்பவரினால் காணப்பட்ட பேட்டியின் விபரம் இங்கு தரப்படுகின்றது.



ஆகவே பொட்டம்மான், பிரபாகரன் மாத்திரமல்ல புலிகளின் தலைமைகள் அனைவரும் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்பது நூற்றுக்கு நூறு வீதமான உண்மையாகும்.

**கேள்வி:-புலிகள் அமைப்பு குறித்த தங்களது கருத்து என்ன? அவ்வியக்கத்தின் செயற்பாடுகள் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

ஜகத்டயஸ்:- புலிகள் இயக்கமானது இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்காகவோ, புலம்பெயர் வாழ் தமிழ் மக்களுக்காகவோ எதுவுமே செய்யாமல் வன்னியில் தமக்கென ஒரு இராச்சியத்தை உருவாக்கி தாமே ஆள வேண்டும் என்ற கோட்பாட்டின் கீழ் தாமே தலைவர்கள் , தாமே மந்திரிமார் என்ற ரீதியில் செயற்பட்டவர்கள். அந்த வகையில் அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதில் நம்மை விட பெரும்பாலும் தமிழர் களே விரும்பினார்கள். எனவே மக்களின் உதவியின் மூலம் எமது போராட்டம் வெற்றி பெற்றது.

**பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டதாகவும் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. வன்னிப் போர் நடவடிக்கையின் போது 57ஆவது படைத்தளபதியாக நீங்கள் இருந்தீர்கள் என்ற ரீதியில் இது குறித்த உண்மை நிலை என்ன என்பதை கூற முடியுமா?**

ஜகத்டயஸ்:- இந்தக் குற்றச்சாட்டினை முற்றுமுழுதாக நான் மறுக்கவில்லை. பொதுமக்கள் கொல்லப்பட்டும் உள்ளனர். காயமடைந்தும் உள்ளனர். இதற்குக் காரணம் நாம் அல்ல. புலிகள் தான் இதற்குக் காரணம். புலிகள் எம்முடன் ( இலங்கை அரச படையுடன் ) மோதல்களில் ஈடுபட விரும்பி இருப்பின் அவர்கள் தாம் தடுத்து வைத்திருந்த அப்பாவிப் பொதுமக்களை வெளியேறுவதற்கு அனுமதித்துவிட்டு எங்களுடன் மோதல்களில் ஈடுபட்டிருக்கலாம். இவ்வாறு மோதியிருந்தால் நாம் மே 19 வரை பொறுத்திருக்க வேண்டி ஏற்பட்டிராது. அதற்கு



யமர்த்தப்படாது முகாம்களில் வசித்து வருகின்றனர்.

இவர்களும் மிகவிரைவில் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப் படுவர். இதற்கான முழு முயற்சிகளையும் தொடர்ந்து

## நாடு கடந்த தமிழீழம் என்பது நிதிசேகரிப்பதற்கான தந்திரமே

**கேள்வி:- வன்னிப் போரின் போது தாங்கள் எத்தனையாவது படைப்பிரிவுக்கு எங்கிருந்து எங்குவரையில் தலைமைவ கித்து சென்றீர்கள்? வன்னிப்போரில் தங்கள் அனுபவங்கள் என்ன?**

ஜகத்டயஸ்:- நான் 57 ஆவது படைப்பிரிவுக்கு தலைமைதாங்கி மடு பெரியதம்பனை, இரணை இலுப்பைக்குளம், பாலம்பிட்டி, பெரியமடு, முள்ளிக்குளம் போன்ற பகுதிகளின் ஊடாக வன்னி நோக்கிச் சென்று இறுதியாக புதுமாத்தளன் நோக்கியதாக எமது போர் நடவடிக்கை அமைந்திருந்தது.

வன்னிப்போரின் போதே தமிழ் மக்களை புலிகள் எவ்வாறு அடக்கி ஆண்டு வந்துள்ளார்கள் என்பதையும் வெளி உலகிற்கு தம்மை விலாசமாகக் காட்டிக்கொண்ட புலிகள் மிகவும் பலவீனமானவர்கள் என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

**கேள்வி:- வன்னிப் போர் குறித்து தங்களது கருத்து என்ன?**

ஜகத்டயஸ்:- வன்னிப் போர் என்பது பாஸிச அராஜகச் சக்தியான புலிகள் அமைப்பு அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதற்காக முன்னெடுக்கப்பட்ட பாரிய நடவடிக்கையாகும். அதில் நாம் வெற்றியீட்டியது எமக்கு மனதார சந்தோசமான விடயமே. எனவே இதனையிட்டு நாம் பெருமை அடைகின்றோம்.

**கேள்வி:- பிரபாகரன் , பொட்டம்மான் தொடர்பிலான உண்மை நிலை என்ன?**

ஜகத்டயஸ்:- பிரபாகரன் , பொட்டம்மான் ஆகிய இருவருமே மரணித்துவிட்டார்கள் என்பது நூற்றுக்கு நூறுவீதமான உண்மையே இதில் நாம் பொட்டம்மானின் சடலத்தை கைப்பற்றவில்லையே தவிர அவரும் கொல்லப்பட்டு விட்டார் என்பதை உறுதியாக தெரிவிக்க முடியும்.

பிரபாகரனினதும் அவரது குடும்பத்தினரதும் சடலங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. ஆனால் பொட்டம்மானின் சடலம் மாத்திரமே எம்மால் கைப்பற்றப்பட்டு அது தொடர்பிலான புகைப்படங்கள் கூட எம்மிடம் உள்ளன. பொட்டம்மானின் மனைவி கொல்லப்பட்டது கூட எம்மால் அல்ல. தான் இறப்பதற்கு முன்னர் பொட்டம்மானே தனது மனைவியை கொலை செய்ததாக பொட்டம் மானிடமிருந்து தற்போது எம்மால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முக்கியஸ்தர்கள் மூலம் நாம் அறிந்து கொண்டோம்.

**கேள்வி:- இலங்கையில் தற்போது புலிகள் இயக்கத்தினர் உள்ளனரா? இல்லையா? அவர்களின் செயற்பாடுகள் எதுவும் உள்ளதாக தெரிகிறதா?**

ஜகத்டயஸ்:-புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் தற்கொலைப்போராளிகளான கரும்புலிகள் மற்றும் பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர்கள் நாம். வன்னிப் போரை ஆரம்பிக்கும் முன்னமே வன்னியில் இருந்து வெளியியேறி குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு சென்றுவிட்டனர். இவ்வாறு சென்றவர்களுக்கு தற்போது அவர்கள் எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஏனென்றால் அவர்களின் தலைமைகள்



அழிக்கப்பட்டு விட்டன. அவர்களுக்கான கட்டளைகளைப் பிறப்பிக்கவோ, அவர்களை வழிநடத்தவோ எவரும் இல்லை. அவர்களுக்கான உத்தரவுகள் யாரிடமிருந்து எப்போ வரும் என்பது தெரியாத நிலை. இந்நிலையில் அவர்களில் பலர் தமது பகுதிகளில் இருந்து தலை மறைவாகியிருக்கலாம். காடுகளுக்குள்ளும் இருக்கலாம் அல்லது இருக்கிறார்கள் என்று கூற முடியும். இவர்கள் திறம்படப்பயிற்றப்பட்டு வளர்க் கப்பட்டவர்கள்.

ஆகவே இவர்கள் குறித்தும் இவர்களின் நடவடிக்கைகள் தொடர்பிலும் நாம் விழிப்பாகவே இருக்கிறோம். இவர்கள் தற்போது புலம் பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் உதவியுடன் மீண்டும் தலைதூக்கலாம் என்று சிலர் கனவுகாண்கிறார்கள். அந்தக் கனவு எக்காரணம் கொண்டும் நிறைவே றாது என்பதை உறுதியாகக்கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**கேள்வி:- வன்னிப் போரின் போது** ஆறு மார்தங்களுக்கு முன்னமே இந்தப் போர் நிறைவடைந்து புலிகளின் பிரச்சினையை முற்றுமுழுதாக முடித்திருப்போம்.

பொதுமக்கள் மீது நாம் வேண்டுமென்றோ அன்றில் திட்டமிட்டோ எந்தவொரு தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை. நான் ஒரு பௌத்த மதத்தைச் சேர்ந்தவன். பௌத்தமோ,இந்துவோ, இஸ்லாமோ, கிறிஸ்தவமோ தர்மத்தைத் தான் போதிக்கின்றன. நாங்கள் என்ன பாவத்தைச் செய்கிறமோ அது திரும்பவும் எங்களுக்கே வந்து சேரும் என்பதும் எமக்குத் தெரியும்.

ஆகவே நாம் திட்டமிட்டு எதனையும் செய்யவில்லை. தாக்குதலின் போது இடையில் அகப்பட்டு பொதுமக்கள் கொல் லப்பட்டதும் காயமடைந்ததும் உண்மைதான். இதற்குக் காரணம் புலிகளே தவிர நாமல்ல.

புலிகள் பொதுமக்களை வெளியேறுவதற்கு விட்டிருந்தால் பொதுமக்கள் அழிவு குறைந்திருக்கும். பொதுமக்கள் வெளியேறி வந்த பொழுது நாம் அவர்களை மனிதாபிமான ரீதியில் எவ்வாறு அனுசரித்து உபசரித்து எவ்வாறான உதவிகளைச் செய்தோம் என்பதை உலகமே அறியும். இங்குள்ள புலம்பெயர் தமிழ் மக்களுக் கும் தெரியும்.

ஆகவே நாம் பொதுமக்களை அழிக்க வேண்டும். கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் எதையும் செய்யவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி :- வன்னி மோதல்களின் போது வெளியேறிய மக்கள் இதுவரையில் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்படாது தொடர்ந்தும் முகாம்களிலேயே த்டுத்துவைக்கப்பட்டுள்ளனர். உண்மையிலேயே அரசாங்கம் தமிழ்மக்கள் மீது அக்கறை கொண்டதாக இருந்தால்,தாங்கள் தற்போது இலங்கையரசின் பிரதிநிதியாக செயற்படுகின்ற ரீதியில் இடம் பெயர்ந்த மக்களை இதுவரை அரசாங்கம் மீள்குடியமர்த்தி முடிக்காமல் இருப்பதற்கான காரணமென்ன என்பதைக் கூறமுடியுமா?**

ஜகத்டயஸ்:- மீள்குடியேற்றம் என்பது உடனடியாக செயற்படுத்துவதற்கு நாம் முடிந்தவரை முயற்சிகளை மேற்கொண்டே வருகின்றோம். நாங்கள்இடம்பெயாந்த மக்களை மீள்குடியேற்றாமல் இருக்கவுமில்லை. வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த சுமார் 3 இலட்சம் மக்களில் தற்போது சுமார் 60 ஆயிரத்திற்கு உட்பட்ட மக்கள் மாத்திரமே மீள்குடி

முன்னெடுத்து வருகின்றோம். மிதிவெடிகள், நிலக்கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்படாத நிலையில் அப்பிரதேசங்களில் அவசரப்பட்டு இவர்களை மீள்குடியர்த்துவதால் அம் மக்களுக்கு ஏதாவதொரு வகையில் பாதிப்புக்கள் ஏற்படும்போது அல்லது அவயவங்கள் இழப்பு என்பன ஏற்படும்போது பொறுப் புள்ள அரசாங்கம் என்றவகையில் நாமே பதில் சொல்லியாக வேண்டும்.

இந்நிலையில் இவ்வாறான சம்பவங்களுக்கும் எம்மீதே குற்றஞ்சாட்டப்படும் நிலை யும் ஏற்படும். இந்நிலையிலேயே நாங்கள் கண்ணிவெடிகள் அகற்றும் விடயங்கள் மற் றும் மீள்குடியேற்றம் என்ற விடயங்களை மிக வும் அவதானமாக மேற்கொண்டு வருகின் றோம்.

கண்ணிவெடிகள் யாவும் அகற்றப்பட்டபின்பு மிகவிரைவாக எஞ்சியுள்ள மக்களும் குடியேற்றப்படுவார்கள்.

**கேள்வி:- தற்போது வன்னிப் பகுதிகளிலுள்ள வாகனங்கள், சொத்துக்கள் என்பன உரியவர்களிடம் மீளளிக்கப்படாமல் இருப்பதாக அறிகின்றோம். இதுபற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

## மலேசியாவில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர் தொடர்பாக விசாரணை

அரசியல் தஞ்சம் கோரும் 75 இலங்கையர்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் பொருட்டு அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள பகுதிக்கு மலேசியாவுக்கான பிரதி இலங்கை உயர்ஸ்தானிகர் அனுப்பி-வைக்கப்பட்டுள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரும் வகையில் அவுஸ்திரேலியாவுக்கு படகில் சென்றுகொண்டிருந்தபோது மலேசிய பொலிஸாரால் இவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டனர்.

இவர்கள் தொடர்பான விசாரணையை நடத்துவதற்காக பிரதி இலங்கை உயர்ஸ்தானிகர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட தெரிவித்தார்.

அவர் தடுப்பு முகாமிற்கு சென்று அங்குள்ள அதிகாரிகளுடனும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களிடமும் கலந்துரையாடி அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 6 பெண்கள், 8 சிறுவர்களும் அடங்குவதாகவும் இவர்கள் சில தினங்களிற்கு முன்னர் மலேசியா கடற்பகுதியில் சேதமடைந்த படகில் தத்தளித்துக்கொண்டிருந்தபோது அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்ததாக ரொய்டர் செய்தி தெரிவித்திருந்தது.

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரும் நோக்கில் பயணித்ததாக மலேசிய பொலிஸாரிடம் அவர்கள் தெரிவித்திருந்தனர். (2-4)

## புலிகளுக்கு ஆதரவான ஐரோப்பிய தமிழ் வர்த்தகர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்த ஐரோப்பிய தமிழ் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவில வைத்து குறித்த நபரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்து இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வே, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குமரன் பத்மநாதன் தொடர்பிலான தகவல்களை திரட்டும் நோக்கில் மலேசியா சென்றிருந்தபோது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் தற்போது இலங்கைப் பாதுகாப்பு பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

### சம்பூர், நுரைச்சோலைக்குப்பின்

## புதிய அனல் மின் நிலையங்கள் அமைக்கப்படமாட்டாது -சம்பிக்க

(கொழும்பு)

நுரைச்சோலை மற்றும் சம்பூர்அனல் மின் நிலையங்களுக்கு பின்னர் இலங்கையில் அனல் மின் நிலைய்ங்கள் பெரும்பாலும் அமைக்கப்படமாட்டாது .மின்சக்தி அமைச்சர் என்ற ரீதியில் இந்த கொள்கையை தொடர்ந்து கடைபிடிக்கவே எதிர்பார்க்கின்றேன் என்று புதிய மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புதிய அமைச்சுப் பொறுப்புக் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது ,

தற்போதைய நிலைமையில் நுரைச்சோலை அனல் மின் நிலையம் முதற்கட்டமாக மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. மேலும் சம்பூரிலும் அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

எவ்வாறிருந்தபோதிலும் நுரைச்சோலை மற்றும் சம்பூர் அனல் மின் நிலையங்களுக்கு பின்னர் எமது நாட்டில் அனல் மின் நிலையங்களை அமைப்பதில்லை என்று தற்போதைய நிலைமையில் அரசாங்கம் கொள்கையளவில் தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது .கடந்த அரசாங்கத்திலேயே இவ் விடயம் குறித்து பரவலாக கலந் துரையாடப்பட்டது.



புதிய மின்சக்தி அமைச்சர் என்ற வகையில் நுரைச்சோலை மற்றும் சம்பூர் அனல் மின் நிலையங்களுக்கு பின்னர் நாட்டில் அனல் மின் நிலையங்கள் அமைக்கப்படத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலேயே நானும் இருக்கின்றேன்.

புதுப்பிக்கத்தக்க மின்சக்தி முறைமையை ஊக்குவிக்கவே நான் எதிர்பார்க்கின்றேன். எனினும் எமது நாட்டின் எதிர்கால மின்சார தேவைகள் எவ்வாறு அமையும் என்றும் நூறு வீதம் எதிர்வு கூற முடியாது. அப்போதைய மின்சார தேவை கருதி பல நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். எனினும் அனல் மின்நிலையங்கள் நிர்மாணிக்கப்படுதலை நான் ஊக்குவிக்கமாட்டேன் . (2-6)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வடமராட்சி பிரதேசம் முழுவதும் மின்சாரம் தடைப்பட்டி ருக்கும் என சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் பிரதான காரியாலயத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது. (6)



யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு நிலையத்திற்கு ஒளிச் சிகிச்சை உபகரணங்கள் (Photo theraphy) வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, சுகாதாரத்திற்குப் பொறுப்பான முன்னாள் யாழ்.மாவட்ட இணைப்பாளர் டாக்டர் லயன் வை.தியாகராஜா, லண்டனிலிருந்து உபகரணங்களை வழங்கிய ஜெயவந்சுதனம் ஆகியோர் உரையாற்றுவதையும், உபகரணங்களை குழந்தை பிரிவு நிலையத்திற்கு கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- டுசாந்தன்)

## குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதில் வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்திலிருந்து விண்ணப்பித்தவர்கள் தங்களுக்குரிய அனுமதி அட்டைகளை கிளிநொச்சி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் அல்லது வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்திலும் யாழ். மாவட்டத்திலுள்ளவர்கள் (நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறியவர்கள் உட்பட) இல 48, காட்டுக்கந்தோர் முகவரியிலுள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (6)

## கண்டிய நடன கற்கைநெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள கண்டிய நடன இலவச சான்றிதழ் கற்கைநெறியின் ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் ஆசிரியர்களால் நடத்தப்படவுள்ள இக் கற்கைநெறி டிசம்பர் மாதம் வரை நடைபெறவுள்ளது. (6)

## இந்திய திரைப்பட விழா குறித்து ஜனாதிபதி இந்திய வெளியுறவு அமைச்சர் பேச்சு

(கொழும்பு)

சர்வதேச இந்திய திரைப்பட விழா தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

குறித்த திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக் கூடாது என சில தமிழ் அமைப்பினர் இந்தியாவில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் திட்டமிட்டபடி குறித்த திரைப்பட விழாவை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இந்தியாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

திரைப்பட இயக்குனர் சீமான் அரசியல்வாதிகளான வை.கோ.மற்றும் தொல். திருமாவளவன் ஆகியோரே இந்த திரைப்பட விழாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதாக திவயின பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (2-6)

## பிரியாவிடையும் வரவேற்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

நுணாவில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையில் கடந்த 11 வருடங்களாக ஆலயத்தின் சபைக்குருவாக பணியாற்றி மே மாதம் முதல் திருகோணமலை அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ்ப்பாணப் பிராந்திய குரு வண பி. ஜெ. சூரியகுமாருக்கான பிரியாவிடை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் நுணாவில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபைக்கு இடமாற்றம் பெற்றுவரும் வண ஏ.எஸ். தேவராசாவுக்கான வரவேற்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4)

## மீனவர்கள் கடல் எல்லையை கடப்பதை தடுக்க செய்மதியூடாக அறிவுறுத்தல்

(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லையை கடந்து மீனவர்கள் செல்வதைத் தடுப்பதற்கு செய்மதியூடாக அறிவுறுத்தல் வழங்கும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும் என கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடல் எல்லையைக் கடந்து செல்லும் மீனவர்கள் கைது செய்யப்படுவதும் அவர்களை விடுவிப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனினும் இதனைத் தடுப்பதற்கு நிரந்தரத்தீர்வு வேண்டும்.

இதற்காக 35ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் செய்மதியின் உதவியுடன் எல்லை கடந்து செல்வதை அறிவுறுத்தும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என மேலும் தெரிவித்தார். (2-6)

## 'நிலாக்காலம்' இயலரங்கு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மகாஜனாசபை கலைஞர் வட்டம் மாதாந்த பூரணை தினத்தன்று நடத்தும் "நிலாக்காலம்" கலைநிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கவி யோகி அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர் ஞாபகார்த்த இயலரங்கு மகாஜன சபை கலைஞர் வட்ட தலைவர் வை.விஜயபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான ஆறு.திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளாக "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" கவியரங்கும், தமிழ் இலக்கியப் புலத்தில் மேன்மைப்படுத்தப்பட்டது.

ஆண்பாத்திரங்களா? பெண்பாத்திரங்களா என்னும் தலைப்பு பற்றிய பட்டிமன்றம் மற்றும் மகாஜனசபை கலைஞர்வட்ட இளங் கலைஞர்களின் கோவலன் கண்ணகி வில்லுப்பாட்டு ஆகியன இடம்பெறவுள்ளன. (4)

## சிறைச்சாலை செயற்பாடுகளில் அரசியல் அழுத்தங்களுக்கு இடமளிக்கப்போவதில்லை

### டியூ குணசேகர



(கொழும்பு)

புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் பத்தாயிரம் பேருக்குப் புனர்வாழ்வு அளிப்பதும் சிறைச்சாலைகளை மறுசீரமைப்பதும் தமது முக்கிய பணியாகுமென்று புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூகுணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும்போது, சிறைச்சாலை செயற்பாடுகளில் அரசியல் அழுத்தங்கள், பழிவாங்கல்களுக்கு இடமளிக்கப்போவதில்லை. புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் 10 ஆயிரம் பேருக்குப் புனர்வாழ் வளித்து அவர்களை சமூகத்தில் உள்வாங்கவேண்டும் .

சிறைச்சாலைகளை மறுசீரமைப்பதுடன் சிறைக்குச் செல்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு பொலிஸ் நீதித்துறையினர் ஒத்துழைப்பு அவசியம். இன்று சிறுவர் , முதியோர் , பெண்கள் எனப் பல பிரிவினரும் சிறையில் உள்ளனர். இவர்களைக் குறைக்கவேண்டும்.

நான் நீர்கொழும்பு சிறையில் மூன்று மாதம் இருந்தேன். எனக்கு வெளியில் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. எனக்காக சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் ஒரு மாதம் போராடினார்.அதன்பின்னர்தான் வீட்டிலிருந்து எனக்கு உணவு வந்தது.

ஆகவே சிறைச்சாலை அரசியல் அழுத்தம் பழிவாங்கல்களுக்கு இடமளிக்கமாட்டேன். கைதிகளை சிறந்த பிரஜைகளாக்கி மீண்டும் வீடுகளுக்கு அனுப்ப வேண்டுமென்றார். (2-6)

## இலஞ்ச ஊழல் மோசடிகளை தவிர்க்க விசாரணை ஆணைக்குழுவை உடனடியாக செயற்படுத்த வேண்டும் -ஐ.தே.க

(கொழும்பு)

அரசாங்கம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை செயற்படுத்தாமலிருப்பதானது இலஞ்ச ஊழல் மோசடிகளை சட்டரீதியாக அங்கீகரிப்பதற்கு சமனாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் டீ பெரேரா தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புவாரேயானால் தற்போது இடைநிறுத்தி வைத்துள்ள இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று அரச ஸ்தாபனங்களில் இடம்பெறுகிளன்ற இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு இடமில்லாமலிருக்கிறது.

இந்த நிலைமையானது நாட்டின் நல்லாட்சிக்கு பாரிய பாதிப்பையே ஏற்படுத்தும்.

அரசாங்கத்தின் சிறந்த நிர்வாக கட்டமைப்பு இன்மையால் இன்று பாரிய அளவு ஊழல்மோசடிகள் அதிகரித்துள்ளது.ஆகையினால் இந்த ஆணைக்குழுவை மீண்டும்புனரமைத்து வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது கட்டாய தேவையாகவுள்ளது.

அவ்வாறு மீண்டும் இந்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் தமது பிரிவினர்களின் ஊழல் மோசடிகளுக்கு வாய்ப்பளித்து ஊக்கப்படுத்துவதாகவே அமையும் என்றார். (2-6)

பணக்காரனாக விரும்புகிறவன்–தன் மனச் சாட்சியைத் தன் பெட்டியினுள் வைத்துக் கொள்ள வேண்டும். – ஜேர்மன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் பணம்

வாழ்க்கைச் செலவு தலைக்குமேல் ஏறிவிட்டது. ஒரு குடும்பத்தில் எல்லோரும் உழைத்தால் மட்டுமே நாளாந்தச் செலவை ஈடு செய்ய முடியும் என்ற நிலையில், தனித்து குடும்பத் தலைவனின் உழைப்பில் வாழும் குடும்பங்கள் சீவனோபாயத்திற்கே அல்லல்படும் அவலநிலை துன்பம் தருவதாகும்.

இந்நிலைமையானது வன்னியில் இருந்து அனைத்து உடைமைகளையும் இழந்து வெறுங் கையோடு வெளியேறிய மக்களையும்,

எந்தவிதவேலைவாய்ப்பும்இல்லாத யாழ்ப்பாண குடாநாட்டையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது.

ஏ–9 பாதை திறக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்தை நோக்கி வங்கிகளும், நிதிக் கம்பனிகளும் படையெடுத்து தளம் அமைப்பதும் தென்பகுதி மக்கள் வியாபாரப் பண்டங்களுடன் இங்கு இடம்பிடித்து விற்பனை செய்வதுமான நடவடிக்கைகள் மட்டுமே நடந்தேறுகின்றன.

இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் 'பணம்' வெளியேறும்நிலையேகாணப்படுகின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களும், சேமிப்பு, முதலீடு என்றபக்குவநிலையின்றி பணத்தை தாராளமாக செலவிடுவதே உயர்ந்த வாழ்வின் அடையாளம் என்ற நினைப்போடு செயற்படுகின்றனர்.

இதற்கு மேலாக தொலைபேசிப் பாவனையும் அதனால் ஏற்படக்கூடிய செலவும் தாராளம்; ஏராளம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு நாளில் எவ்வளவு இலட்சம் ரூபாய் தொலைபேசியின் ஊடாக எங்களை விட்டுச் செல்கின்றதென்னும் ஆய்வினை யாரேனும் மேற்கொள்வார்களாயின் அதன் முடிபு பேரதிர்ச்சி தருவதாகவே அமையும்.

கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் இடம் பெறும் தொலைபேசி உரையாடலானது பொருளாதார சேவையுடன் சம்பந்தப்பட்டதாகும்.

அதாவது ஒரு நிமிடத் தொலைபேசி உரையாடல் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இலாபத்தைக் கூடத் தருவதாக இருக்கும்.

இதுபோல்தான் வளர்ச்சி கண்ட நாடுகளிலும் தொலைபேசி பாவனை என்பது பொருளாதார செயற்பாட்டுடன் தொடர்புபட்டதாக இருப்பதால் அது இலாபம் ஈட்டலுடன் சம்பந்தப்படுகிறது.

ஆனால் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் நிலைமை அப்படியல்ல.

தெரிந்த தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அரட்டை அரங்கம் நடத்துவதாகவே உள்ளது.

இதனால் எந்த இலாபத்தை அடைய முடியும்?

ஆக, யாழ்ப்பாணக் குடாநாடு சும்மா இருந்து கொண்டு ஏற்கனவே கையிருப்பில் உள்ள பணத்தை செலவிட்டு சீவியம் நடத்துகிறது.

ஒரு சில ஆண்டுகள் கடந்தால், பணத்திற்கான தட்டுப்பாடு பலரை பஞ்சத்திற்குள் தள்ளிவிடும்.

இந்த உண்மை மனப்பூர்வமாக உணரப்பட வேண்டும்.

# தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும்

## மேதினச் செய்தியில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்

சுமார் முப்பது வருடங்களின் பின்னர் எமது நாட்டில் சுமுகமானதொரு சூழ்நிலையில் இம்முறை உலக உழைக்கும் மக்களின் உரிமைக்கான தினத்தைக் கொண்டாட கிடைத்துள்ளமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் விடுத்த மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலக உழைக்கும் மக்களின் உரிமைகள் தொடர்பில் குரல் எழும்பும் இத்தினத்தில், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் உரிய வரப்பிரசாதங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதே எமது அபிலாசையாகும். உழைக்கும் மக்களின் வியர்வைக்கு ஏற்ப அவர்களுக்கான வேதனங்கள் வழங்கப்படுவதுடன் அவர்களது ஏனைய உரிமைகளும் வழங்கப்பட்டு, பேணப்படல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையில் நாம் இருந்து வருவதுடன் அதனுடன் சேர்த்து, உழைக்கும் மக்களது உரிமைகள் தொடர்பில் பாடுபட வேண்டிய தேவையும் எமக்கு உண்டு.

எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களை கைநழுவ விடாமல் எமக்கான உரிமைகள் தொடர்பில் உழைப்பதற்கும் அதற்கான குரலை எழுப்புவதற்கும் எமது மக்கள் அனைவரும் ஓரணி திண்டு முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

உழைக்கும் மக்களின் உன்னதமான இந்நாளில் அம்மக்களது உரிமைகள் அனைத்தும் வெல்லப்பட்டு அவர்களது எதிர்கால வாழ்க்கை ஒளிமயமானதாக அமைவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ந)

# பார்வதி அம்மாளுக்கு சிகிச்சை வழங்க தமிழக அரசாங்கம் தயாராம்

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளிடம் இருந்து அரசுக்கு இதுவரை எந்த கோரிக்கையும் வரவில்லை. அவர் மனு கொடுத்தால் நிபந்தனையின் அடிப்படையில் சிகிச்சைக்கு அனுமதிக்கத் தயார் என தமிழக அரசு வக்கீல் ராஜா கலிபுல்லா தெரிவித்தார்.

பார்வதியம்மாள் திருப்பி அனுப்பப்பட்டதை எதிர்த்து வழக்கறிஞர் கருப்பன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றில் பொது நலன் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். அதில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகக் கடந்த 16ஆம் திகதி மலேசியாவில் இருந்து சென்னை வந்த பார்வதி அம்மாளை குடியுரிமை அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

விசா உள்ளிட்ட உரிய அனுமதியுடன் வந்த பார்வதி அம்மாளை, இந்தியாவுக்குள் அனுமதிக்காதது சர்வதேச மனித உரிமை மீறல். இதனால் பார்வதி அம்மாளை தனி விமானம் மூலம் மீண்டும் சென்னை அழைத்து வர மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் தெரிவித்திருந்தார். மேலும் மருத்துவச் செலவுகள் அனைத்தையும் மத்திய அரசே ஏற்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிக்கள் தர்மாராவ், கே.கே.சசிதரன் ஆகியோர் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது தமிழக அரசு வக்கீல் ராஜா கலிபுல்லா கூறுகையில், பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாவிடம் இருந்து அரசுக்கு இதுவரை எந்தக் கோரிக்கையும் வரவில்லை. அவர் மனு கொடுத்தல் நிபந்தனையின் அடிப்படையில் சிகிச்சைக்கு அனுமதிக்கத் தயார் என்றார்.

இதையடுத்து நீதிபதிகள் கூறுகையில்,

பார்வதியம்மாளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக 2 வாரத்துக்குள் மனு கொடுக்கப்படும். அந்த மனுவை மத்திய, மாநில அரசுகள் பரிசீலித்து 4 வாரத்துக்குள் முடிபைத் தெரிவிக்க வேண்டும் என்றனர். (ச)

# நித்தியானந்தாவுடன் இருப்பது நான் அல்ல நடிகை ரஞ்சிதா அதிரடித் தகவல்!

(சென்னை)

தன்னைப் பற்றி யூகத்தின் அடிப்படையில் வெளியாகும் தகவல்கள் அனைத்தும் தவறானவை என்று முதன் முதலாக தெரிவித்துள்ள நடிகை ரஞ்சிதா, நித்தியானந்தாவுடன் வீடியோவில் இருப்பது தான் அல்ல என்றும், இனியும் அந்தக் காட்சிகளை வெளியிட்டால் மானநஷ்ட வழக்கு தொடர்வதாகவும் எச்சரித்துள்ளார்.

நித்தியானந்தா சாமியார், நடிகை ரஞ்சிதாவுடன் இருப்பது போன்ற காட்சிகளை கடந்த மாதம் 2ஆம் திகதி ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பியது. நித்தியானந்தாவிடம் சீடராக இருந்த லெனின் என்பவர் அந்தக் காட்சியை எடுத்ததாக கூறினார். அதன் அடிப்படையில் கர்நாடக சி.ஐ.டி. பொலிசார் வழக்குப் பதிவு செய்து கடந்த 21ஆம் திகதி நித்தியானந்தாவைக் கைது செய்தனர்.

அவர் மீதான விசாரணையைப் பொலிசார் தொடர்ந்து வருகின்றனர். இந்த விசாரணையில் இதுவரை முக்கிய தகவல்கள் எதையும் நித்தியானந்தா வெளியிடவில்லை. தான் தவறு எதுவும் செய்யவில்லை என்ற தகவலைத் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்.

இந்நிலையில் இந்த வழக்கில் நடிகை ரஞ்சிதாவையும் கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என்று சிலர் கோரிக்கை விடுத்தனர். அதன் பேரில் கர்நாடக பொலிசார் நடிகை ரஞ்சிதாவைத் தேடிவருவதாகத் தகவல்கள் வெளியாயின.

ஆனால் ரஞ்சிதா, கேரளாவில் இருப்பதாகவும், ஓரிரு நாளில் பெங்களூர் வந்து பொலிசாரிடம் ஆஜராகி வாக்கு மூலம் அளிக்கப் போவதாகவும் ஒரு பரபரப்பு தகவல் வெளியானது.

தன்னைப் பற்றி யூகத்தின் அடிப்படையின் வெளியாகும் இந்த தகவல்கள் அனைத்தும் தவறானவை என்று முதன் முதலாக ரஞ்சிதா தெரிவித்துள்ளார்.

கடந்த 2 மாதங்களாக மௌனமாக இருந்து வந்த ரஞ்சிதா தற்போது டில்லி வக்கீல்கள் மூலம் அதிகாரப்பூர்வமாக தன் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். நித்தியானந்தாவுடன் வீடியோவில் இருப்பது நானல்ல. எனவே இனியும் அந்தக் காட்சிகளை வெளியிட்டால் மானநஷ்ட வழக்கு தொடர்வேன் என்று ரஞ்சிதா எச்சரித்துள்ளார்.

இதனை தெளிவாக விளக்கிய ரஞ்சிதாவின் வக்கீல் பிரசாந்த மென்டிரட்டா, அந்த வீடியோ காட்சிகளை எதிர்வரும் 2ஆம் திகதி (ஞாயிறு) மாலை 5.00 மணிக்குள் அகற்றி விட வேண்டும். இது குறித்து சம்பந்தப்பட்ட இணையத் தளங்களுக்கும் ரஞ்சிதா அறிவுறுத்தல் விடுத்துள்ளார். 2ஆம் திகதிக்குப் பின்னரும் அந்தக் காட்சிகள் இருந்தால் இந்திய தண்டனை சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்ப சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட இணையத் தளங்கள் மீது மானநஷ்ட வழக்கு தொடரப்படும்.

இந்த எச்சரிக்கையை இணையத் தளங்களுக்கும் பக்ஸ் மற்றும் கூரியர் மூலம் ரஞ்சிதா அனுப்பி வைத்துள்ளார் என்று கூறினார். நடிகை ரஞ்சிதா தற்போது எங்கிருக்கிறார் என்று அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு வக்கீல் பிரசாந்த் கூறுகையில், ரஞ்சிதா அவர் குடும்பத்தினருடன் பாதுகாப்பான ஓர் இடத்தில் இருக்கிறார் என்றார். வேறு எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டார். (ச)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## பல்சுவை

துன்பங்களுக்கு நல்வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்! உன்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக்குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு!

மற்றவர்களுக்கு நன்மை செய்வது தான் தர்மமாகும். மற்றவர்களுக்குத் தீமை செய்வது பாவமாகும். வலிமையும் ஆண்மையும் தர்மம். பலவீனமும் கோழைத் தனமும் தீமை. சுதந்திரமான வாழ்க்கை புண்ணியமாக அமைகிறது. மற்றவர்களிடம் அன்பு செலுத்துவது தான் புண்ணியச் செய லாகும். மற்றவர்களை வெறுத்து ஒதுக்குவதே பாவச் செயலாகும். கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் கொண்டிருப்பது தர்மம். சந்தேகப்பட்டுக் கொண்டி ருப்பதே பாவம். ஒருமைப்பாடு காண்கிற ஞானமே தர்மமாகும். வேற்றுமையைக் காண்பது தான் பாவச் செயலாக அமைந்திருக்கிறது.

# சோமாலிய கடற்கொள்ளையர்கள் 11 கப்பல்களைக் கடத்தினர்

(விளாடிவோஸ்டோக்)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 11 கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன. அவற்றில் இருந்த 194 கப்பல் ஊழியர்களும் பிணைக்கைதிகளாக கொள்ளையர்களால் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர்.


உலகம் முழுவதும் இந்த ஆண்டு ஏப்ரல் வரை நடைபெற்றுள்ள 67 கப்பல் தாக்குதல் சம்பவங்களில் 35 தாக்குதல்கள் சோமாலிய கடற்கொள்ளையர்களால் நடத்தப்பட்டுள்ளன என சர்வதேச கடல்சார் அமைப்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும் முந்தைய ஆண்டு இதே காலகட்டத்தில் 102 தாக்குதல் சம்பவங்கள் நடந்தன.

அதனுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தாக்குதல் சம்பவங்கள் குறைந்துள்ளன.

ஏடன் வளைகுடா பகுதியில் சர்வதேச கடற்படைகள் மேற்கொண்டு வரும் தொடர் கண்காணிப்புகள் திறமையான கடற் கொள்ளை எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தாக்குதல் சம்பவங்கள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தாக்குதல் எண்ணிக்கை குறைந்திருப்பினும் தாங்கள் தாக்குதல் நடத்தும் எல்லைகளை கடற்கொள்ளையர்கள் விரிவுபடுத்தி வருவது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏடன் வளைகுடா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தங்கள் கைவரிசையைக் காட்டி வந்த கொள்ளையர்கள் தற்போது கென்யா, தான்சானியா உள்ளிட்ட கடற்பகுதிகளிலும் தாக்குதலை நடத்தி வருகின்றனர். மேலும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் மடகஸ்கார் மற்றும் அரேபிய கடல் பகுதியிலுள்ள ஏமன் வரையிலும் தங்கள் எல்லையை அவர்கள் விரிவுபடுத்தியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)



பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்று வரும் 16 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த இலங்கை அதிபர் ராஜபக்ஷ (இடது). இந்திய பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் சந்தித்து கைகுலுக்கிக் கொண்டனர்.

# கட்டப் பொம்மனின் வாரிசுக்கு அரசு வேலை கிடைக்க ஏற்பாடு

(திருநெல்வேலி)

வறுமையில் வாடும் கட்டபொம்மனின் வாரிசுக்கு அரசு வேலை கிடைக்க ஏற்பாடு செய்தாக நெல்லை கலெக்டர் ஜெயராமன் உறுதியளித்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுகள் தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச் சியில் வசிக்கின்றனர். இவர்களுக்காக 1974 இல் கட்டித்தரப்பட்ட வீடுகள் சிதிலமடைந் துள்ளன. வாரிசுகளில் பலர் கட்டட தொழிலா ளர்களாக, சாரதிகளாக இருக்கின்றனர். ஐந் தாம் தலைமுறை வாரிசான வீமராஜாவின் நிலை குறித்து அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது.

இதை பார்த்த நெல்லை கலெக்டர் ஜெயராமன் வீமாராஜாவை நேரில் சந்தி[...] அழைத்திருந்தார். வீமராஜா தன் மனை[...] மகள் முருகதேவியுடன் கலெக்டரை ச[...] தித்தார். முருகதேவி திருநெல்வேலியை[...] அடுத்துள்ள பேட்டையில் வசிப்பதாகவும் அவரது கணவர் கட்டட வேலைக்கு செல் வதாகவும் வீமராஜா தெரிவித்தார். முருக தேவிக்கு சத்துணவு உதவியாளர் பணிக்கு ஏற்பாடு செய்வதாக கலெக்டர் உறுதி யளித்தார். இதற்காக முதல்வருக்கு கடிதம் எழுதுவதாகவும் தெரிவித்தார். (2-6)

## எனக்கு அரசியல் ஆர்வம் உள்ளது

# எந்தக் கட்சியில் சேருவேன் என முடிவு செய்யவில்லை-குஷ்பு பேட்டி



(சென்னை)

எனக்கு அரசியலில் ஆர்வம் இருக்கிறது. ஆனால் எந்த கட்சியில் சேருவேன் என்பதை முடிவு செய்யவில்லை என்று நடிகை குஷ்பு கூறினார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு செக்ஸ் பற்றி நடிகை குஷ்பு சொன்ன கருத்துக்கு எதிராக தமிழ் நாட்டில் பல்வேறு நீதிமன்றில் 22 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குஷ்பு தொடர்ந்த வழக்கை சென்னை மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அத்தீர்ப்பை எதிர்த்து டெல்லி உயர் நீதி மன்றில் குஷ்பு மேன் முறையீடு செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் குஷ் புவுக்கு எதிரான 22 வழக்குகளையும் தள் ளுபடி செய்தனர்.

இதற்கிடையில் குஷ்பு காங்கிரஸ் கட்சியில் சேரப்போவதாக ஒரு தகவல் பரவியது. அதற்கு பதில் அளித்த குஷ்பு கூறியதாவது,

உங்களுக்கு பிடித்த கட்சி எது? என்று என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு நான் எப்போதுமே காங்கிரஸ் கொள்கை களை பின்பற்றுபவள்... இந்திராகாந்தி மீதும் ராஜீவ்காந்தி மீதும் எனக்கு அதிக பற்று உண்டு என்றுதான் பதில் அளித்தேன். காங்கிரஸ் கட்சியில் சேருவேன் என்று நான் சொல்லவில்லை.

அரசியலில் ஈடுபடுவீர்களா? என்ற கேள் விக்கு எனக்கு அரசியலில் ஆர்வம் இருக் கிறது. ஆனால் அரசியலில் சேருவது பற்றி உறுதியான முடிவு எடுக்கவில்லை. அரசிய லில் சேரமாட்டேன் என்றும் சொல்ல மாட் டேன் என்று கூறினேன்.

அதைத் தொடர்ந்து எந்த கட்சியில் சேருவீர் கள்? என்று கேட்டார்கள். அதற்கு எந்த கட்சி யில் சேருவேன் என்பதை முடிவு செய்யவில்லை என்று பதில் அளித்தேன். இவ்வாறு குஷ்பு கூறினார். (2-6)

# அடுத்த 'சார்க்' மாநாடு மாலைதீவில் நடத்த முடிவு

(திம்பு)

17 ஆவது தெற்காசிய பிராந்திய ஒத் துழைப்பு உச்சி மாநாட்டை அடுத்த ஆண்டு மாலைதீவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள் ளது. பூட்டான் தலை நகர் திம்புவில் 16 ஆவது சார்க் மாநாடு வியாழக்கிழமை முடிவடைந்தது. அப்போது அடுத்த மாநாட்டை மாலைதீவில் நடத்துவதென முடிவு செய யப்பட்டதாக பூட்டான் பிரதமர் ஜிக்மே தின்லே தெரிவித்தார்.

1985 இல் ஏற்படுத்தப்பட்ட சார்க் அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், நேபா ளம், பூட்டான், பங்களாதேஷ், இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய எட்டு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. திம்பு மாநாட்டு நிறைவு கூட்டத்தில் அடுத்த மாநாட் டை 2011 இல் மாலைதீவில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்டன. (2-6)

# எழுபது வருடங்களாக எவ்வித உணவையும் உட்கொள்ளாமல் உயிர் வாழும் ஞானி?

## இந்திய ஆன்மீக வாதி தொடர்பில் ஆச்சரியம்



கடந்த ஏழு தசாப்த காலமாக எவ்வித உணவையும் உட்கொள்ளவில்லை என தெரிவிக்கும் இந்திய ஆன்மீகவாதி தொடர் பில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

83 வயதான பரலாட் ஞானி என்ற ஆன் மீகவாதியே இவ்வாறு எழுபது ஆண்டுகளாக உணவு உட்கொள்ளாமல் உயிர் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலின் உண்மைத் தன்மை குறித்து தற்போது மருத்துவ ஆய்வாளர்கள் சோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த ஆய்வு வெற்றியளித்தால், யுத்த காலத்தில் உணவை உட்கொள்ளாமல் எவ் வாறு போராட்டங்களை தொடர்வது என்பது குறித்து படைவீரர்களுக்கு பயிற்சிகளை வழங்க முடியும் என நம்பிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

மேற்கு அஹமதாபாத்தில் உள்ள வைத் தியசாலை ஒன்றில் 30 மருத்துவர்கள் ஆன் மீகவாதி ஞானியை பரிசோதனை செய்து வருகின்றனர்.

குறித்த ஆன்மீகவாதி தங்கியிருக்கும் அறைகளில் இரண்டு கமராக்கள் பொருத் தப்பட்டுள்ளதாகவும் அவர் வெளியில் செல் லும் போது மொபைல் கமராக்களின் மூலம் படமெடுக்கப்படுவதாகவும்,

இருபத்து நான்கு மணித்தியாலங்களும் மருத்துவ சோதனை நடத்தப்பட்டு வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது. இருதயம், மூளை மற்றும் ஏனைய முக்கிய உடற்பாகங்களில் ஏற்படும் மாற்றங்கள் கண்காணிக்கப்படவுள் ளது.

இந்த ஆய்வுகளின் மூலம் உணவு மற்றும் நீர் இன்றி மனிதன் உயிர் வாழக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றதா? என் பதனை வெளிப்படுத்த முடியும் என ஆய்வுக் குழுவின் முதன்மை டாக்டர் ஜீ.இளவழகன் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி முதல் ஆய் வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் குறித்த காலப்பகுதியில் ஆன்மீகவாதி ஞானி எந் தவொரு உணவுப் பொருளையும் உட்கொள்ள வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சிறுநீர் கழிப்பதற்காகவோ அல் லது மலம் கழிப்பதற்காகவோ அவர் ஆர்வம் காட்டவில்லை என்றும் எந்த வகை சக்தி யைப் பயன்படுத்தி இவர் உயிர் வாழ்கின்றார் என்பதனை அறிந்து கொள்ளும் முனைப்புக் கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தியானங்களின் மூலம் தாம் உடலுக்குத் தேவையான சக்தியைப் பெற்றுக் கொள் வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எட்டாவது வய தில் கடவுள் தமக்கு இந்த அரிய சக்தியை வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் அநேக இடங் களில் பிரபல்யம் தேடும் நோக்கில் இவ்வாறு போலிப் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

# சார்க் நாடுகளின் உள்துறை அமைச்சர்களின் மாநாடு

(திம்பு)

சார்க் நாடுகளின் உள்துறை அமைச் சர்கள் மாநாடு ஜூன் 26 திகதி இஸ்லாமா பாத்தில் நடைபெறவுள்ளது. பிரதமர் மன் மோகன் சிங்கை பாக் பிரதமர் கிலானி சந் தித்துப் பேசிய பின் இத்தகவலை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது குரேஷி தெரிவித்தார்.

பாதுகாப்பு நிறுவனங்கள் இடையே ஒருங்கிணைப்பை உருவாக்குவது, பயங்கர வாதத்தை எதிர்கொள்ள தகவல்களை பரி மாறிக் கொள்வது, போதைக் கடத்தல் உட்பட பல விடயங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளன.

சார்க் உள்துறை அமைச்சர்களின் மா நாடு முதன் முறையாக 2006 ஆம் மாதம் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடந்தது. 2007 ஒக்டோபரில் டில்லியில் நடந்தது. அதன் பின் இரு முறை நடப்பதாக அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. மாநாடு வரும் ஜூனில் நடக்க உள்ளது. இம்மா நாட் டில் இந்தியா சார்பில் உள்துறை அமைச்சர் சிதம்பரம் கலந்து கொள்ளக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# உலகக்கிண்ண பயிற்சிப் போட்டியின் இறுதிப்போட்டியில் ஆப்கான் வெற்றி

மேற்கிந்திய தீவுகளின் கயானாவில் நேற்று ஆரம்பமான 3ஆவது 20-இருபது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதியாக இடம்பெற்ற பயிற்சி போட்டிகளில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் முதன் முறையாக காலடி எடுத்து வைத்துள்ள ஆப்கானிஸ்தான் அணி, 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணியை வீழ்த்தியது.

நாணய சுழற்சியில் பெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணித்தலைவர் மங்கல் முதலில் களத்தடுப்பினை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு போர்டர் பீல்ட் 0, ஸ்டிர்லிங் 6, நெயில் ஓ பிரைன் 14, கசாக் 6, கெவின் ஓபிரைன் 3, பின்னர் களமிறங்கிய வில்சன் 32, மூனே 42 ஓட்டங்களைப் பெற்றனர். அயர்லாந்து அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 133 ஓட்டங்களை எடுத்தது. பந்து வீச்சில் ஆப்கானிஸ்தானின் அகமத்சாய் 4 விக்கெட்டை வீழ்த்தினார்.

134 என்ற எட்டக்கூடிய வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுதாடிய ஆப்கானிஸ்தான் அணிக்கு நூர் அலி 14, கரிம் சாதிக் 14, அணித்தலைவர் மங்கல் 27, ஸ்டானிக்சாய் 39 (ஆட்டமிழக்காமல்) முகமது நபி 28 ஓட்டங்களை பெற்றனர்.

ஆப்கானிஸ்தான் அணி 19.3 ஓவரில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 134 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதேவேளை கயானாவில் இடம்பெற்ற மற்றுமொரு பயிற்சி போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து .

# 'எனது முன்னேற்றத்துக்கு யுவராஜ்தான் காரணம்'

## மனந்திறக்கிறார் ரோகித்சர்மா



ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாக விளையாடிய வீரர்களில் ரோகித் சர்மாவும் ஒருவர். டெக்கான் சார்ஜர்ஸ் அணி அரை இறுதிக்கு முன்னேற இவரது ஆட்டம் முக்கிய பங்கு வகித்தது. ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக விளையாடியதால் 20 ஓவர் போட்டிக்கான இந்திய அணியில் இடம் கிடைத்தது. இது குறித்து ரோகித்சர்மா கூறியதாவது,

கடந்த 20ஆம் திகதி அணிக்கு நான் தேர்வு செய்யப்பட்டேன். நான் தேர்வானது எனக்கு முதலில் தெரியாது. அப்போது ஐ.பி.எல். போட்டியில் கவனம் செலுத்தி வந்தேன். அணி வீரர்களுடன் பஸ்சில் சென்று கொண்டிருந்தபோது நிருபர் ஒருவர் தொடர்பு கொண்டு நான் தேர்வு செய்யப்பட்டதை தெரிவித்தார். இது மிகுந்த மகிழ்ச்சியை தந்தது.

2007ஆம் ஆண்டு உலக கோப்பையை கைப்பற்றியது போல மீண்டும் கோப்பையை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எனது இந்த முன்னேற்றத்துக்கு யுவராஜ் சிங்தான் காரணம். அவர் எனக்கு துடுப்பாட்ட நுணுக்கம் அனைத்தையும் சொல்லி கொடுத்தார். அதனால்தான் என்னால் சிறப்பாக ஆட முடிகிறது. அவருக்கு எனது பாராட்டை தெரிவிக்கிறேன்.

நான் அணியில் மீண்டும் இடம்பெறுவதற்கு அவர் தான் மீண்டும் காரணம். அணியில் இருந்து நீக்கப்பட்டபோது யுவராஜ் என்னை சந்தித்து ஆலோசனை வழங்கினார். எனது துடுப்பாட்டமுறை முழுக்க அவரிடம் இருந்து கற்றதுதான்.

என்னைப் பொறுத்த வரை எந்த வரிசையிலும் விளையாட தயாராக இருக்கிறேன். ஆனால் மிடில் வரிசையைதான் நான் விரும்புகிறேன். இவ்வாறு ரோகித்சர்மா கூறியுள்ளார்.

# வீ.டீ. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்

## ஆட்டமிழக்காது நிரோசன் அதிரடிச்சதம்

## கால் இறுதிக்குச் சென்றது ஒல்ட்கோல்ஸ்



சென்றல் விளையாட்டுக்கழகம் 7ஆவது ஆண்டாக நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் முதலாவது சுற்றில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ஸ் அணி, பற்றீசியன்ஸ் அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 45.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றனர். மிலான்டோ 57, முகுந்தன் 34, நிலோஸன் 29, விதுபாலா 17 ஓட்டங்களை பெற்றனர்.

சிறிகுகன் 3 இலக்குகளையும் நிகேந்தன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 197 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 36.5 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

நிரோசன் (16 பவுண்டரிகள் உட்பட) ஆட்டமிழக்காது 109 ஓட்டங்களை பெற்று இச்சுற்றுப் போட்டித் தொடரில் 9ஆவது சத வீரர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரசோபனன் 12, சிறிகுகன் 12, யோகன் 14 ஓட்டங்களைப்பெற்றனர். முகுந்தன் , சுஜீவன், மிலாண்டோ தலா 2இலக்குகளை கைப்பற்றினர். ஓல்ட்கோல்ஸ் அணி இவ் வெற்றியின் மூலம் யாழ்.பல்கலைக் கழக அணியைகால்இறுதிப்போட்டியில்மோதவுள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த அணி தெரிவில் இதுவரை நடைபெற்ற 12 போட்டிகளில் ஜொலிஸ்ரார் அணி 13 புள்ளிகளையும், யாழ்.பல்கலைக்கழக அணி 10 புள்ளிகளையும், கிராஸ்கொப்பர்ஸ் அணி 5 புள்ளிகளையும், ஈகிள்ஸ் அணி 5 புள்ளிகளையும், ஓல்ட்கோல்ஸ் அணி 5 புள்ளிகளையும், கே.சீ.சீ.சீ. அணி 3 புள்ளிகளையும், சென்றிலட்ஸ், பற்றீசியன் அணிகள் புள்ளிகள் எதுவும் பெறாதநிலையிலும் உள்ளனர்.

# 'நான் ஆம்பிளையே இல்லை' சாமியார் நித்தியானந்தா கதறல்!

நான் ஆண் மகனே இல்லை. யாரோ செய்த சதியில் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறேன் என்று பொலிஸ் விசாரணையில் சாமியார் நித்தியானந்தா கதறி அழுதார்.

நடிகை ரஞ்சிதாவுடன் சாமியார் நித்தியானந்தா நெருக்கமாக இருந்த காட்சிகள் வெளியானபிறகு அவர் மீது புகார்கள் குவிந்து வருகின்றன.

நித்தியானந்தாவுக்கு நடிகை ரஞ்சிதாவுடன் மட்டுமின்றி மேலும் 5 பெண்களுடன் தொடர்பு இருந்துள்ளது. அவர்களுடன் அவர் நெருக்கமாக இருக்கும் காட்சிகள் அடங்கிய சி.டிகள் கிடைத்துள்ளன. இதை சாமியாரிடம் விசாரணை நடத்தும் சி.ஐ.டி குழுவுக்கு தலை மை வகிக்கும் எஸ்.பி.யோகப்பாவும் இதை உறுதிப்படுத்தி இருக்கிறார். நித்தியானந்தா விடம் சி.ஐ.டி அதிகாரிகள் காலை தொடங்கி மாலை வரை துருவித் துருவி விசாரணை நடத்தினர்.

நான் எந்த தவறும்செய்யவில்லை. எல்லாவற்றுக்கும் காலம் பதில் சொல்லும் என்று வழக்கமான பாணியில் அவர் கூறியதால் பொறுமை இழந்த பொலிஸார் விசாரணை முறையை சிறிது மாற்றி உள்ளனர். அதை சமாளிக்க முடியாத சாமியார், நான் ஆம்பிளையே இல்லை. பிறகு எப்படி பாலியல் உறவில் ஈடுபட முடியும்? பொலிஸார் கைப்பற்றியுள்ள சி.டி.யில் இருப்பதும் நானில்லை. எனக்கு களங்கம் ஏற்படுத்த யாரோ செய்துள்ள சதியில் மாட்டிக் கொண்டு அவதிப்படுகிறேன் என்று குரல் தழுதழுத்தப்படி கூறியுள்ளார். அவருக்கு ஆண்மை சோதனை நடத்த முடிவு செய்துள்ள பொலிஸார் பெங்களூரில் உள்ள மருத்துவமனைகளிடம் நேரம் ஒதுக்கும்படி கேட்டுள்ளனர். (ச)

# ஆப்கானிஸ்தான் அணி குறித்து இந்திய வீரர்களுக்கு தோனி எச்சரிக்கை

(செயின்ட் லூசியா)

20-இருபது உலககோப்பையில், ஆப்கானிஸ்தானை குறைத்து மதிப்பிட வேண்டாம் என இந்திய அணி வீரர்களுக்கு தோனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சி பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி, தனது முதல் போட்டியில் இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது. இப்போட்டி குறித்து இந்திய அணித்தலைவர் தோனி கூறியதாவது,

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியை பயிற்சி போட்டி போல கருதமாட்டேன். எதிரணிகளை எப்போதும் நான் குறைவாக மதிப்பிடுவது கிடையாது. எந்த அணியாக இருந்தாலும் அதை வீழ்த்துவதே எனது நோக்கமாக இருக்கும். ஆப்கானிஸ்தான் வீரர்களின் செயல்பாடுகள் பற்றி அதிகம் தெரியாது.

இது ஒருவகையில் நல்லது தான். அவர்களைப் பற்றி அறிந்திருந்தால் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண் டும். இந்திய அணியின் செயல்பாடு உலகின் அனைத்து அணிகளுக்கு எதிராகவும் சிறப்பாகவே இருக்கும்.


இதனால் இந்திய வீரர்கள் ஆப்கானிஸ்தானை மிகவும் எச்சரிக்கையுடன் எதிர் கொள்ள வேண்டும். உலக கோப்பை பயிற்சி போட்டிகளில் பங்கேற்காதது இந்திய அணிக்கு பாதிப்பாக அமையாது.



ஏனெனில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து ஐ.பி.எல். போட்டிகளில் இந்திய அணி வீரர்கள் விளையாடி உள்ளனர். இந்த அனுபவமே போதும். ஒரு சில நாட்கள் கிடைத்த ஓய்வு, புதிய உற்சாகத்தை அளித்துள்ளது.

### யுவராஜ் அசத்துவார்

காயம் காரணமாக சேவக் இடம் பெறாதது பின்னடைவு இல்லை. அவருக்குப் பதிலாக திறமையான வீரர்களை தேர்வு செய்துள்ளோம். தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்துவார்கள் என நம்புகிறேன்.

அணியின் முக்கிய வீரர் யுவராஜ். உலகக் கோப்பையில் அவர் அசத்துவார் என எதிர்பார்க்கிறேன். அதிரடி ஆட்டக்காரரான யுவராஜ், ஆட்டத்தின் போக்கை மாற்றும் திறன் படைத்தவர் என்றார் தோனி.



மாதகல் அருள்மிகு நுணசை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழாவின் போது சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதையும் தேர் திருவீதி உலாவருவதையும் காவடிகளின் பவனியையும் வாரணம் எப்.எம். ஊடாக நேரடி அஞ்சல் செய்வதையும் படங்களில் காணலாம்.

## புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கையர் கிறிஸ்மஸ் தீவுகளில் ஆர்ப்பாட்டம்

புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானியர்கள் கிறிஸ்மஸ்தீவுகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 25 இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் இவ்வாறு எதிர்ப்பு போராட்டங்களை நடத்தியுள்ளனர். அடைக்கலம் மறுக்கப்பட்டதனால் ஆத்திரமுற்ற குறித்த அகதிகள் எதிர்ப்புப் போராட் டங்களை நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் இன்னும் பல அகதிகளுக்கு அடைக்கலம் மறுக்கப்படலாம் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் தெரிவித்துள்ளார்.

அடைக்கலம் மறுக்கப்பட்ட மக்களை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் நிலைமைகள் சுமுகமடைந்து வருவதனால் அதிகளவானோரது புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

## நாடுகடந்த அரசுடன் இணைந்து செயற்பட பிரித்தானிய தொழிற் கட்சி இணக்கம்

(கொழும்பு)

நாடுகடந்த அரசு உட்பட பிரித்தானியாவில் இருக்கின்ற எல்லா அமைப்பக்களுடனும் இணைந்து, போரின்போது இடம் பெயர்ந்த தமிழ் மக்களை மீள் குடியேற்றுவது,

போரினால் சிதைக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீளக்கட்டியெழுப்புவது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கு ஜனநாயக ரீதியில் இவ் அமைப்புக்களால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லா வகையான நடவடிக்கைகளையும் முன் எடுப்பதற்கு நாம் ஆதரவு வழங்கி செய்படுவோம் என்பதை உறுதிப்படுத்துகின்றோம் என பிரித்தானிய தொழில் கட்சியால் வெளியிடப்பட்டுள்ள துண்டு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா வாழ் தமிழ் மக்களுக்கு தொழில் கட்சியின் வேண்டுகை என்ற தலைப்பில் எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள இவ் துண்டு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிபுக்கு வந்திருந்தாலும் தமிழ் மக்களின் அமைதிக்கான போராட்டம் இன்னும் நடந்து கொண்டே இருக்கின்றது.

தமிழ் மக்கள் தொடர்பில் சிறிலங்கா அரசு தனது கொள்கைகளையும் அணுகு முறைகளையும் மாற்றுவதோடு தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை மதிக்கவும் வேண்டும்.

இதுகுறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (ச)

## பயங்கரவாதத்தை தோற்கடிப்...

நாம் தோற்கடித்துள்ளோம்.

அதற்கு எமது நாட்டின் உழைக்கும் மக்கள் பெரும் சக்தியாக விளங்கினர் என்பதை பெரும் மதிப்புடன் நினைவுப்படுத்துகின்றேன்.

பயங்கரவாதம் மூடிய அபிவிருத்திப்பாதைகள் இன்று எமது நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினருக்கு திறந்து விடப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்திப்பாதையில் பயணிக்க முடிந்த மகிழ்ச்சியில் இலங்கை உழைக்கும் வர்க்கத்தினர் இவ்வருடம் உலக தொழிலாளர் தினத்தை கொண்டாடுகின்றனர்.

உழைக்கும் மக்களுடன் கைகோர்த்து பதவிக்குவந்த தலைவன் என்ற வகையில் அவர்களின் அபிலாசைகளை பாதுகாக்க முடிந்தமை எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

அதேபோன்று உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடிந்தமை, மக்களுடன் நெருங்கி அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ள முடிந்தமை எமது வெற்றியின் இரகசியம் என்பதை நான் அறிவேன்.

தேசிய வளங்களை பாதுகாத்து நாடு இழக்கவிருந்த வளங்களை நாம் மீட்டபோது உழைக்கும் மக்கள் அடைந்த மகிழ்ச்சி எமக்கு மேலும்மேலும் உத்வேகமூட்டியது.

பொருளாதார அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக முன்வரும் காலங்களில் நாம் உழைக்கும் மக்களுக்கு மேலும் பல சலுகைகளைவழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதற்கான தடைகளையும் சவால்களையும் வெற்றிகொள்ள உழைக்கும் மக்கள் அரசுடன் இணைந்திருப்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன் என்றும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ச)

## கூட்டங்களுக்கும் பேரணிகளுக்...

உலகத் தொழிலாளர் தினமான இன்று அரசியல் கட்சிகள் தமது பேரணிகளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்த திட்டமிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொழும்பு மாநகர மைதானத்தில் மேதினக் கூட்டத்தை நடத்தவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தனது மேதினக் கூட்டத்தை வழிபாடுகள் மூலம் நடத்தவுள்ளது.

பொரளை ஹம்பல் பூங்கா மைதானத்தில் ஜே.வி.பி. தனது மேதினக் கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மே தினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமை செயலகத்திலும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி தனது யாழ்ப்பாண அலுவலகத்திலும் நடத்த திட்டமிட்டுள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மட்டக்களப்பில் நடத்தவுள்ளது: இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலவாக்கொலையிலும்தமது மேதினக்கூட்டத்தைநடத்தவுள்ளன.

இதேவேளை மலையக மக்கள் முன்னணி மறைந்த தலைவர் சந்திரசேகரனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தோட்ட ரீதியாக நடத்த திட்டமிட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தமிழரசுக்கட்சி நடத்தும் மேதினக்கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாட்டின் வீதியிலுள்ள கட்சியின் தலைமை காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விவசாய சங்கங்களின் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகை தரும் தொழிலாளர்கள் மத்தியில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா விசேட உரையாற்றுவார் என கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## கடத்தல் சம்பவங்களுக்...

மக்களின் கல்வி உரிமையை பறிக்கப்படும் செயல்களாகவே காண்கின்றோம். இச்செயலானது உடனடியாக நிறுத் தப்படவேண்டும்.

இது ஒரு வகையான மனித உரிமைமீறலும் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படுகின்றமையாகும்.

இக் கண்டனப்பேரணியில் இந்து குருமார் ஒன்றியம், கிறிஸ்தவ குருமார் ஒன்றியம், பல்கலைக்கழக சமூகம், அதிபர், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், கிராம சேவையாளர்கள், மக்கள்பணித் தொண்டர்கள், இளைஞர்கள், யுவதிகள், வர்த்தகர்கள், கடற்தொழிலாளர்கள் சங்கங்கள் விவசாயிகள், பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட்ட அனைவரையும் கலந்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இக்கண்டனப் பேரணி மனித உரிமை கள் ஆணைக்குழு, யாழ். செயலகம் மற்றும் யு.என்.எச்.சி.ஆர். அலுவலகம் ஆகியவற்றுக்குச்சென்று மகஜர்களும் கையளிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


### ஐடியல் அக்கடமி

சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய். | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய்.

**O/L Day Class**

இறுதிப் பிரிவு ஆரம்பம்: 03.05.2010 (திங்கள்) நேரம் - 8.00A.M

-நிர்வாகி.

(1304)


## ஆறுமுகன் தொண்டமான் திங்களன்று பதவியேற்பார்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஆறுமுகன் தொண்டமான் எதிர்வரும்திங்கட்கிழமையன்று அமைச்சுப் பதவியேற்கவுள்ளாரெனத் தெரியவருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 16ஆவது சார்க் உச்சிமாநாட்டில்கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி நேற்று நண்பகல் 12.00 மணியளவில் நாடு திரும்பினார். எனவே இன்று அமைச்சுப்பதவி வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் இன்று மேதினம் என்பதால் எதிர்வரும் திங்கட் கிழமையன்று அமைச்சுப்பதவிஏற்கவுள்ளாரென கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ச)

## வடக்கிலிருந்து...

மீள்குடியேற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வன்னியில் இடம் பெற்ற இறுதிப் போரில் உயிர்நீத்த இராணுவத்தினரின் நினைவாக ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியை பாதுகாப்புச் செயலர் நேற்றுத்திறந்து வைத்தார்.

மும்படைத்தளபதிகள் சகிதம் ஆனையிறவுக்குச் சென்ற கோத்தபாய அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபியையும் அதற்கான நினைவுக்கல்லையும் நேற்று திறந்து வைத்தார். (ச)

## பிரிகேடியர்...

இவர் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைகளிலும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிற்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் இவரின் கட வுச்சீட்டை பறிமுதல் செய்யுமாறும் மஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டார். (ச)

## டெங்கு...

கப்பட்டார்.

இதேவேளை நோயினால் இறந்த குழந்தை வசிக்கும் வீட்டிற்கு அருகே விலங்குக் கழிவுகள் கொட்டப்பட்டு நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாது இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ச-30)




### SIAT ACADEMY

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

கடந்த 24/04/2010; 25/04/2010 ஆகிய திகதிகளில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற Animation கற்கை நெறிக்கான கருத்தரங்கிலும் பயிற்சிப் பட்டறையிலும் பங்குபற்றிய அனைவருக்குமான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை 02/05/2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் **யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில்** நடைபெற உள்ளது.

இப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பணிப்பாளர் சபை

MAG NET Academy (Pvt)Ltd.

(சி-186)


## மரண அறிவித்தல்

### திருமதி சரோசா சாந்தலிங்கம்



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் பொன்னாலை தெற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோசா சாந்தலிங்கம் 30.04.2010 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தலிங்கத்தின் (கட்டட கூலி ஒப்பந்தக்காரர்) அன்பு மனைவியும், ரவிகுலன் (பாபு), யதுகுலன் (மோகன்), ரகுகுலன் (ஜெயா), சபரீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.05.2010 இன்று காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(1301)


### யாழ். மாவட்ட கேபிள் T.V உரிமையாளர்களுக்கான வேண்டுகோள்

யாழ். மாவட்ட கேபிள் T.V நடத்துநர்கள் அனைவரும் தவறாது உங்கள் அங்கத்துவ, அனுமதிக் கட்டணங் களை 05.05.2010 இற்கு முன் செலுத்தி கேபிள் T.V தொழிலைப் பதிவு செய்து கொள்ளுங்கள். அத்துடன் 02.05.2010 ஞாயிறு 10.00 மணிக்கு மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் தொழில் நுட்ப நிறுவனத்தில் நடைபெற வுள்ள கலந்துரையாடலிலும் தவறாது கலந்து கொள்ளவும்.

அங்கத்துவக் கட்டணத்தை 182, K.K.S. வீதியில் உள்ள எமது நிறுவனத்தில் செலுத்தவும்.

மேலதிக விபரங்களிற்கு:

T. குமார் 0777710785

T. ஸ்ரீதரன் 0775284689

(சி-185)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.